# எஸ்.பிரீத்தி கல்வியியல் கல்லூரி
# ஆண்டு மலர் - 2018

## ஆண்டு மலர்க் குழுவினர்

### தலைவர்

முனைவர் N. விஜயலெட்சுமி - முதல்வர்

### பதிப்பாசிரியர் குழு

முனைவர் G. பாக்கியராஜ் - தத்துவத்துறை
திரு. K. ஆறுமுகம் - தமிழ்த்துறை
திருமதி M. முத்துச்செல்வம் - தமிழ்த்துறை

### மாணவிகளின் குழு

G. உஷா - B.Ed இரண்டாம் ஆண்டு
M.ஷாலினி - B.Ed இரண்டாம் ஆண்டு
S.பிரேமா - B.Ed இரண்டாம் ஆண்டு

### கல்லூரி வாழ்த்து

இந்த புத்தக வடிவில் வந்துள்ள ஆண்டுமலர், எங்களது ஆசிரிய மாணவிகளின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றன. மலரின் கருத்துக்கள், மாணவிகளின் எண்ணங்களை கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்படுத்துகின்றன. பக்கத்துக்கு பக்கம் அருமையான கருத்துக்களை படித்து சுவைத்து மகிழுங்கள்.

- ஆண்டு மலர்க்குழுவினர்.

### வெண்பா

பெண்களுக்கு மட்டும் பிரீத்தியன்னை கல்வியியல்
கண்ணொளி தந்திடும் கல்லூரி – மண்ணடிமை
நீங்கியும் பெண்ணடிமை நீங்காத நாட்டிலே
பொங்குதே பெண்களால் பூத்து.

- கவிஞர் ஆ. சின்னச்சாமி

# பதிப்புரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க கல்விப் பணி செய்து வரும் எஸ். பிரீத்தி கல்வியியல் கல்லூரியில் இவ்வாண்டு (2017-2018)ல் வெளிவரும் இம்மலருக்குத் தனிசிறப்புண்டு. தேசியகல்வித்தர மதிப்பீட்டுக் குழுமம் (NAAC) எங்களது கல்லூரிக்கு 'B' தகுதி சான்றிதழ் வழங்கப்பட்டுயிருக்கிறது.

பல்வேறு பெருமைக்குரிய எஸ். பிரீத்தி கல்வியியல் கல்லூரியின் சிறப்பிற்கு என்றும் துணையாக நிற்கும் கல்லூரி தலைவர், செயலாளர், நிர்வாக அதிகாரி என நிர்வாகத்தினர் அனைவரின் உழைப்பினையும், கல்லூரி முதல்வர்கள், ஊழியர்கள், அலுவலர்கள், மாணவியர்கள் என அனைவரின் உழைப்பினையும் பதிப்புக்குழு எண்ணிப்பார்த்து நன்றி கூறுகிறது.

இம்மலருக்காக கவிதைகள், கட்டுரைகள் படைத்த மாணவிகள் அனைவருக்கும் பதிப்புக்குழு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. கல்லூரியின் கலைத்திறமைக்குச் சான்று பகிர்வதாக இம்மலர் திகழ்கிறது.

**முனைவர் நா. விஜயலெட்சுமி**

**அமைப்பாளர், பதிப்புக்குழு**



# வாழ்த்துரை

கிராமப்புற மாணவிகளுக்குச் சிறந்த ஆசிரியர்கல்வி வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இக்கல்லூரி 2008-ல் ஆரம்பிக்கப்பட்டு சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. 10வது ஆண்டுவிழாவில் வெளியிடப்படும் இந்த ஆண்டு மலரில் மாணவிகளது கவிதைகள், மற்றும் கட்டுரைகள் அவர்களுடைய எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை வெளிக்காட்டுகின்றன.

ஆண்டுமலர் சிறப்பாக வெளிவர முயற்சியை மேற்கொண்ட கல்லூரியின் தாளாளர், முதல்வர்கள், பேராசிரியர்கள் அலுவலக நண்பர்கள், மாணவிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிவரும் எதிர்காலத்திலும் மாணவிகளது பலவகையான திறமைகளை வளர்க்கும் விதமாக புதுமையான வாய்ப்புகள் கொடுத்து முன்னேற்றம் அடையச்செய்ய என்னுடைய வாழ்த்துக்கள்.

**டாக்டர் A.ஜோசப் ஸ்டாலின்**

**தலைவர்**

**எஸ். பிரீத்தி கல்விக்குழுமம்**

**சிவகங்கை**



# வாழ்த்துரை

பெண்கள் அனைவரும் படிக்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட S.பிரீத்தி கல்விக்குழுமம் சிவகங்கை மாவட்டத்தில் 2008-ம் ஆண்டு துவங்கப்பட்டு சீரும் சிறப்புமாக செயலாற்றி வருகின்றது.

பத்தாவது ஆண்டுவிழாவில் வெளியிடப்படும் ஆண்டுமலரில் ஆசிரிய மாணவிகள் பல்வேறு தலைப்புகளில் வெளியிட்ட கவிதைகள் மற்றும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆண்டுக்கு ஒருமுறை மலரும் மகிழம் பூ போன்று எமது கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு மலர் மலர்ந்து மணம் வீச வாழ்த்துகிறேன்.

இவ் ஆண்டுமலர் சிறப்பாக வெளிவர வழிகாட்டியாக இருந்த முதல்வர்கள், பேராசிரியர்கள், அலுவலக நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆண்டு மலரில் தங்களது படைப்புகளை வெளியிட்ட மாணவிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் V.ஆண்டனி ஜோ ராஜா**

**தாளாளர்**

**எஸ். பிரீத்தி கல்விக்குழுமம்**

**சிவகங்கை.**



# வாழ்த்துரை

ஒரு சிறந்த ஆசிரியர் தனது பாடத்தில் சிறப்பறிவு பெற்றிருப்பதுடன் அனைத்து விதமான திறன்களையும், திறமைகளையும் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் வருங்கால மாணவர்களை முழுமையான ஆளுமைப் பண்பு உடையவர்களாக மாற்ற முடியும்.

கல்வியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று மாணவர்களுடைய படைப்பாற்றல் திறனை வளர்ப்பதாகும். அப்படைப்பற்றல் திறனை மேம்படுத்தும் முயற்சியாக ஆசிரிய மாணவிகளின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆண்டுமலரில் மாணவிகளின் எண்ணங்களாய் கவிதைகள், கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவ் ஆண்டுமலர் சிறப்பாக வெளிவர வாய்ப்புக் கொடுத்த நிறுவனத்தலைவர் அவர்களுக்கும் தாளாளர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். இம்மலர் வெளிவர உதவிபுரிந்த பேராசிரியர்கள், அலுவலக நண்பர்கள், பணியாளர்கள், படைப்புகள் படைத்த ஆசிரிய மாணவிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**முனைவர் நா. விஜயலெட்சுமி**

**முதல்வர்**

**எஸ். பிரீத்தி கல்வியியல் கல்லூரி**

**சிவகங்கை.**



# வாழ்த்துரை

இளைய தலைமுறையினரின் இலட்சியப் பயணத்தின் வழிகாட்டிகளாக விளங்கப்போகும், நமது கல்லூரி ஆசிரிய மாணவிகளின் படைப்புத்திறனைப் பதிவு செய்யும் வகையில் ஆண்டு மலர் அமைந்துள்ளது. இலக்கியங்களின் வகைகளையும் வரலாற்றுத் தடையங்களையும் உணரும் வண்ணம் வடித்தெடுக்கப்பட்டுள்ள இந்த ஆண்டுமலர் மென்மேலும் மலர வாழ்த்துகிறேன். இவ் ஆண்டுமலர் மலர உறுதுணையாக இருந்த பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் அலுவலக நண்பர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**K. ஆறுமுகம்**

**முதல்வர்**

**S. பிரீத்தி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்**

**அரசனூர்.**

**சிவகங்கை.**

M.Divya Praba
I-B.Ed



# நினைத்துப்பார்

பத்துமாதம் படாதபாடுபட்டு பத்தியங்கள் பலகாத்து
பத்திரமாய் பெற்றெடுத்தாள் ஆனால்
அவளோ பாதுகாக்க ஆளில்லாமல்
பைத்தியம்போல் திரிகிறாள்.....

உதிரத்தை உணவாக அளித்தவள், ஒருவேளை
உணவின்றி ஊர்ஊராய் அலைகிறாள்.......

பிஞ்சு கைபிடித்து நடக்கக்கற்றுக் கொடுத்தவர், அவர்நடை
தளரும்போது ஓடிவிட எண்ணுகிறாய்.....

உன்முகம் காணும் முன்பே உன்னை நேசித்தவர்கள்,
அவர்கள் முகத்தைக் காணவோ யோசிக்கிறாய்.......

இரவும் பகலும் உன்னையே நினைத்தவர்களையே,
நீ இன்று பாரமாய் நினைக்கிறாய்.....

கஷ்டம் தெரியாமல் வளர்த்ததிற்கா,
கஷ்டப்படாமல் தள்ளிட எண்ணுகிறாய்...

உன் பெற்றோருக்கே இந்த நிலைமை யென்றால்,
நீ பெற்றவர்களால் வரப்போகும்
உன் நிலைமையை நினைத்துப்பார்.....

கருவறையில் தாங்கிய தாயின் நிலையைப் பார்த்துதான்
கல்லறையில் கூட உன்னை தாங்க மறுக்கிறாள் பூமித்தாய்....
இயந்திரம் போன்ற இதயமற்ற உன் வாழ்க்கையின்
முடிவில் காத்திருப்பது....மண் மயானம் அல்ல,
மின் மயானம்.......

## பெண்

திருமணத்திற்கு முன் தன்னைப் பெற்றவர்களுக்காகவும்,
திருமணத்திற்குப் பின் தான் பெற்றவர்களுக்காகவும்
தன் வாழ்க்கையைத் தனக்குப் பிடித்தவர்களுக்காக வாழ்பவள்.....
மழை
புகுந்த வீட்டிலிருந்து தன்
பிறந்த வீட்டிற்கு வரும்
மண்ணின் மகள்.....

## அறிவுரை

அறிவுரைகளின் அருமை தெரிவதில்லை
ஆறுதல் தேடிநிற்கும் வரை......

## காதல்

உன்னிடம் பேசக்கூடாது என்றுதான் நினைக்கிறேன்
இருந்தாலும் பேசிவிடுகிறேன்....என் கனவில்

## இறைவன்

உலகத்தில் உள்ளவைகளுக்காக
உன் பின்னால் வருபவர்களை
ஏற்றுக்கொள்கிறாய்......
ஆனால்
உலகத்தையே தன் பின்னால் வைத்துக்கொண்டு
உள்ளத்திற்காக ....
உன் பின்னால் வருபவரையோ
ஏற்றுக்கொள்ள யோசிக்கிறாய்......

## கொசு

வருவதும் தெரிவதில்லை
போவதும் தெரிவதில்லை
சத்தமில்லாமல் கொடுத்த முத்தமே
மூன்று நொடிகளுக்குப் பிறகுதான் தெரிகின்றது.....

## போர்வை

அழுகையின்
ஆழம்
அறிந்தவன்.......

## என் அன்பான அப்பா

நம் வாழ்வு சிறக்க
தன் வாழ்வு முழுக்க
அடகு வைப்பவர்

தன் குடும்பம் AC ரூமில் தூங்க
தன் தூக்கத்தை தூசி ரோட்டில்
கழிப்பவர்

தன் குழந்தை பிடித்ததை உண்ண
தான் மட்டும் கிடைத்ததை உண்பவர்

சந்தோஷமான நிகழ்வுகளைக்கூட
நிழற்படங்களில் பார்த்து ரசிப்பவர்....

தன் குழந்தையின் அடத்திற்கு
என்றுமே அடங்கிப்போபவர்.....

## எனது ஏக்கம்

அனைத்து விஷேச
நாட்களையும்
கொண்டாட
ஆசைப்பட்டதை விட.....

அப்பாவோடு கொண்டாட
வேண்டும்
என ஏங்கிய நாட்களே
அதிகம்.....

## அம்மா

என் தேவைகளுக்காக
தன் தேவைகளைக் குறைத்தவள்......
தான் பட்டக் கஷ்டம்
நான் படக்கூடாது என்று நினைப்பவள்.....
தன் தூக்கம் தவிர்த்தேனும்
நம் தூக்கம் காப்பவள்....
பசியின் ருசியை அறியவிடாதவள்.......

B.வைசாலி
I- B.Ed



## நல்லாசிரியர்

கல்லடிபட்டாலும் கனிகளைத் தர
மறுக்கிறதோ நல்மரங்கள்!
சொல்லடிபட்டாலும் கனிவினைத் தர
மறுப்பாளோ நல் அன்னை!
கண்ணடிபட்டாலும் ஒளியினைத் தர
மறுப்பானோ பகலவன்!
கனவுகள் நினைவாகவில்லை எனினும்
மனம் நினையாதிருக்குமோ!
உறவுகள் நிலையில்லை, எனினும்
உறவாடாதிருக்குமோ நெஞ்சம்!
உண்மைகள் உயிர்க்கவில்லை எனினும்
உய்யாதிருக்குமோ உலகம்!
ஆவி போனாலும் ஆசிரியர்தம்
தொழில் மறுப்பாரோ!
வானத்து மீனாயினும் மணம் வீசும் மலராயினும்
மழலை பேசும் குதலையாயினும் மாணவர் எப்படியாயினும்
நல்லாசிரியர் நல்லாசிரியர் தான்!

K.Dhivya Bharathi
I year-B.Ed



## அம்மா

அப்பா கட்டிய
வீடாயிருந்தாலும்
அது நமக்கு
அம்மா வீடுதான்!
அடுப்படியோ
அம்மாவின் அலுவலகம்!
அன்பு மட்டுமே
எதிர்பார்க்கும் சம்பளம் !
காய்ச்சல் வந்தால்
மருந்து தேவையில்லை !
அடிக்கடி வந்து
தொட்டுப் பார்க்கும்
அம்மாவின் கையே
போதுமானது !
இவ்வளவு
வயதாகியும்
புதுச்சட்டைக்கு மஞ்சள் வைத்து வருபவனைக்
கேலி செய்யும்
நண்பர்களே......
அது

அவன் வைத்த

மஞ்சள் அல்ல !

அவன்,

அம்மா வைத்த

மஞ்சள் !

டைப்பாய்டு வந்து

படுத்த அம்மாவுக்கு

‘சமைக்க முடியவில்லையே’

என்கிற கவலை !

“அம்மா தாயே”

என்று

முதல் முதலில்

பிச்சை கேட்டவன்

உளவியல் மேதைகளுக்கெல்லாம்

ஆசான்......!

எந்தப் பொய் சொல்லியும்

அம்மாக்களை

ஏமாற்றி விட முடியும்...

“சாப்பிட்டு விட்டேன்”

என்கிற

அந்த ஒரு பொய்யைத் தவிர !

அத்தி பூத்தாற்போல

அப்பனும் மகனும் பேசி சிரித்தால்

விழாத தூசிக்கு கண்களை தேய்த்துக் கொண்டே

நகர்ந்து விடுகிறார்கள் அம்மாக்கள் !

வெளியூர் செல்லும்

பிள்ளைகளின்

பயணப் பைக்குள்

பிரியங்களைத் திணித்து வைப்பார்கள்

இந்த அம்மாக்கள் !

பீஸ் கட்ட

பணமென்றாள்

பிள்ளைகள்

அம்மாவைத்தான் நாடுகின்றன..........

காரணம்,

எப்படியும்

வாங்கிக் கொடுத்துவிடுவாள் !

அல்லது

எடுத்துக் கொடுத்துவிட்டு

திட்டு வாங்கிக் கொள்வாள் !

வீட்டுக்குள்

அப்பா இருந்தாலும்

அம்மா என்று தான்

கதவை தட்டுகிறோம் !

அம்மாக்களைப் பற்றி

எழுதப்பட்ட

எல்லா கவிதைகளிலும்

குறைந்த பட்சம் 2 சொட்டு கண்ணீர்

ஈரம் உலராமல் !

அகில உலக

அம்மாக்களின்

தேசிய முழக்கம் இதுதான்........

“என் பிள்ளை பசிதாங்காது”.........!!!

என் தாய்க்குச் சமர்ப்பணம்........!!!!!

## உறவுகள்

இணைந்தது கரங்கள்

மட்டுமல்ல.....

இதயங்களும் என்பதை

மறவாதே.....

ஒருவரை ஒருவர் உயிராய்

நேசியுங்கள்....

உங்களைப் போலவே

உங்கள் துணையின்

உறவுகளையும் நேசியுங்கள்......

உங்களுக்குள்

ஒருவருக்காக

இன்னொருவர் போட்டி

போடுங்கள்-அன்பைக்

காட்டுவதில் மட்டும்.....

அதிகமாக விட்டுக்கொடுங்கள்

ஆனால்

உங்களுக்குள் விட்டு கொடுக்காதீர்கள்.....

ஏனெனில்

உங்களின் இணைகளின் மரியாதை

மற்றவர்களிடத்தில் தான்......

காரணம்

இனி அவர் தான்

நீங்கள்

நீங்கள் தான்

அவர் என
மனதில் வையுங்கள்.....
எல்லா நலமும் வளமும்
பெற்று பெருவாழ்வு
வாழ வேண்டும்.
வாழ்க்கையில் எவ்வளவு
பெரிய கஷ்டம் வந்தாலும்
ஊக்கப்படுத்தவும்
“உன்னால் முடியும்”
என்று
கூறவும் ஒரு உறவு
இருந்தாலே போதும்......
நம்மிடம் தோல்வி கூட
தோற்றுப்போகும்......

## நட்பு

நல்ல நாட்களைச் சந்திக்க
சில மோசமான நாட்களைக்
கடந்து தான் ஆக வேண்டும்.....
நல்ல மனிதர்களை
அடையாளம் காண,
சில மோசமான மனிதர்களைக்
கடந்துதான் ஆக வேண்டும்.....

# நட்பு

உன் சுவாசத்திலும்

இருப்பேன்!

உன் விசுவாசத்திலும்

இருப்பேன்!

நீ உண்ணும் உணவிலும்

இருப்பேன்!

உன் பேச்சிலும்

இருப்பேன்!

நீ எழுதும் எழுத்தாகவும்

இருப்பேன்!

உன் விழியாகவும்

இருப்பேன்!

உன் உடலிலும்

இருப்பேன்!

உன் உயிரிலும்

இருப்பேன்!

உன் கவலையிலும்

இருப்பேன்!

கவலையைப் போக்கும்

கண்ணீராகவும் இருப்பேன்!

உன் பார்வையாகவும்

இருப்பேன்!

உன் பார்வை படும்

இடமாகவும் இருப்பேன்!

நீ முன்னேற

ஏணியாகவும் இருப்பேன் !

விழாமல் இருக்க

தூணாகவும் இருப்பேன் !

என்றும் உன்னுடன்

இருப்பேன் !

உன் நண்பனாக.....


R.Veni priya
I year-B.Ed




## மொழி

தமிழன்

பிறமொழி பேசுபவனை

குருவாக பார்க்கிறான்

தாய்மொழியில்

பேசுபவனை குரு குரு

வென பார்க்கிறான்

## தனிமை

சில நேரங்களில் தனிமை கடினம்

சில நேரங்களில் தனிமைதான்

இனிமையான தருணம்............

## காதல்

பிரிவைத் தாங்காத இதயங்களே
உறவை வளர்க்காதீர்கள்
உறவை வளர்த்து விட்டால்
கடைசிவரை பிரிய
நினைக்காதீர்கள்

## கோபம்

அடிக்கடி கோபப்பட்டால்
கோபத்திற்கு மரியாதை
இல்லை
கோபமே படாவிட்டால்
நமக்கே மரியாதை
இல்லை

## தாயின் தவிர்ப்பு

கருவில் சிலையாய் உருவாகி
வீட்டில் சில்லரை ஒலியாய்
ஒழிக்கும் சின்னக் குழந்தைகள்
குழந்தைகளைப் பார்த்து
மகிழ்ச்சி அடையும் அன்னை
கடைசியில் பெற்றோர்களை
மகிழ்ச்சி அடையச் செய்யும்
முதியோர் இல்லம் !!!

## நட்பு

*நண்பனை நினைத்து கவிதை எழுதினேன்*

*நீ இல்லாத போது*

*பின்புதான் தெரிந்தது வந்தது*

*கவிதை அல்ல*

*என் கண்ணீர் துளி என்று.....*



K.Krishnavi

I year-B.Ed

## Wounder day

Wounderful Wounderful !How wounderful !
On this day !
Wounderful Wounderful !
In the worning to see sunrise Wounderful
Go to temple and pray,In that way
Every thing is Wounderful Wounderful !
I see beautiful flowers ,birds,animals and fruits etc.
But that way wounderful ! wounderful
Flowers has smiling face,
Birds are singing beautifully.
There are wounderful to this day !
Wounderful Wounderful ! How wounderful !
On this day;
Wounderful Wounderful !

A.Sudha
I year-B.Ed



# தெரிந்து கொள்வோம்
## பழங்களின் பெயர் தமிழில்

Apple -அரத்திப்பழம், குமளிப்பழம்,
Orange -கமலாப்பழம், நாரத்தை, நாரத்தம், கிச்சிலி
Strawberry -செம்புற்றுப்பழம்
Cherry -சேலாப்பழம்
Watermelon -குமட்டிப்பழம், தர்பூசணி
Blue berry -அவுரிநெல்லி
Black berry -நாகப்பழம், நாவல்பழம்.

**FATHER**

F for the friend that you are
A an anchor I can reply on
T a teacher I can Learn from
H a hero I can look up to
E a constant source of encouragement
R a role model I'm proud of my father

## பணம்

உழைப்பில் மலர்ந்து கைகளில் தவழ்ந்து
வியர்வையில் நனைந்து பைகளில் நிறைந்து
குடும்ப உறவுகளில் மகிழ்ச்சியைப் பொங்க வைத்து
எப்போது எங்களை வாழ வைக்கப் போகிறாய் !
பணமே.....!காகித பணமே.....!

## தத்துவம்

வாடா மல்லிக்கு வண்ணம் உண்டு
ஆனால் வாசமில்லை
வாசமுள்ள மல்லிக்கோ வயது குறைவு
வீரமுள்ள கீரிக்கு கொம்பில்லை
கொம்புள்ள மானுக்கோ வீரமில்லை
கருங்குயிலுக்குத் தோகையில்லை
தோகையுள்ள மயிலுக்கோ இனிமையான குரலில்லை
காற்றுக்கு உருவமில்லை
கதிரவனுக்கு நிழலில்லை
நீருக்கு நிறமில்லை
நெருப்புக்கு ஈரமில்லை.....
எவர் வாழ்விலும் நிறையில்லை.....
எவர் வாழ்விலும் குறையில்லை.....!

## அம்மா

மழையில் நனைந்த என்னை
எல்லோரும் திட்டிய போது
தலையை துவட்டி விட்டு
மழையை திட்டியவள் என் அம்மா

T.Balanathiya
I year-B.Ed



## பெண்மை

பெண் என்பவள் ஒரு ஓவியம்
அவ்வோவியத்தை உருவாக்கிய
தாயே சிறந்த ஓவிய ஆசிரியர்
மழைத் துளிகள் மண்ணில் விழுந்து
மண்ணைப் பெருமைப்படுத்துகின்றது.
அதுபோல
பெண் என்பவள் தாயின் கருவறையில் பிறந்து
பெண்மையைப் பெருமைப்படுத்துகிறாள்.

## ஆசிரியர்

அறிவுக்கு அடிதளம் ஆசிரியர்
அன்பை பாவித்து அறிவை வளர்க்கிறார்
தாய் என்பவள் தாய்மை அடைந்த பிறகு தான்
அந்தத் தாயே அடுத்தப்படியான ஆசிரியர் தான்.
அறிவை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து
அன்பை மாணவர்களிடம் எதிர் பார்க்கிறார்.

## பசுமை

மழைத்துளிகள் மண்ணில் விழுந்து
செடி கொடிகளைப் பசுமையாக்குகின்றன.
நாட்டின் தலைவர்கள் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்து

தமிழ்நாட்டைப் பசுமையாக்குகின்றன.

ஒரு குடும்பத்தில் பெண் என்பவள் விளக்கு ஏற்றி

குடும்பத்தைப் பசுமையாக்குகின்றாள்

மேகமும், கடலும் மழையே தந்து

மழை நீரும் மண்ணும்

முத்தமிடும் சத்தம்

அழகிய மழையின் சங்கீதம்

மழையின் தாய்

மரங்கள் என்பதை

காற்றின் இருதயம்

இலைகள் என்பதை

தாயின் கருவறை

தவம் என்பதை

உரத்துச் சொல்லுங்கள்.

J. Prema

I Year B.Ed



## மழை

வெயிலில் வேர்க்க விறுவிறுக்க

மேலேறி கூடவந்து

மேகத்தை யாரடித்தார்?

கருத்து சிறுத்து துளிதுளியாய்

சிணுங்கி அழுகிறதே!

வள்ளுவரின் வான்சிறப்பில்

மழையான மருந்து

விலையாய் போனதின்று!

எறும்பைவிட சிறுத்துப்போனேன்

அன்றாடம் காய்ச்சவே.

ஆக,

வானுக்கும் பூமிக்கும்

இலாப, நட்ட கணக்கு

எஞ்சி நிற்பது

உமக்கு எமக்கும்

கவிதை மழை!

## அழுக்காய் தெரிந்தாலும் அழகுதான் ஏழைக்குழந்தை

அழுங்கறித்த பொருள்கூட

அழகாய்சிதறிக் கிடக்கும்

அந்தச் சிறு குழந்தையின்

அழகைக் காணும் போது !

இறைவன் படைப்பில்

இயல்பு கெடாமல்

தொடரும் பட்டியலில்

இன்றும் இருக்கிறது

குழந்தையின் சிரிப்பு !

## சேவல்

தூக்கத்தில் இருப்பவரை
காலை வேளை வருமுன்
துணிச்சலுடன் எழுப்பி
கண்விழிக்க வைத்து
பணி காலத்திலும் பொதுப்பணி செய்கிறாய்
பாடம் ஏதும் படிக்காமல் பள்ளிக்கூடம் போகாமல்!

## தூய்மையின் ரகசியம்

மனத்தூய்மை ஒழுக்கம் தரும்
அறிவுத் தூய்மை உயர்வு தரும்
சொல்தூய்மை மகிழ்வைத் தரும்
புறத்தூய்மை மதிப்பைத் தரும்
அன்புத் தூய்மை நட்பைத் தரும்
நாட்டின் தூய்மை
கடமையைக் கற்று தரும்.

## ஈசல்

மழை வேண்டி
தவம் கிடந்தேன் மண்ணுக்குள்....!
சிறகு இருந்தும்
சிக்கி கொண்டேன் -சிறகு இருக்கும் கொடியோருக்கு.....!
ஆயுள் முடியும், விடியும் முன் என்று தெரிந்தும்
பறந்து சென்று இரையானேன் - எரிந்து போவேன்
என்று தெரிந்து.....

M.Abinaya
B.Ed II year



## வாழ்க்கை

வாழ்க்கை என்பது
ஓவியமல்ல
மாற்றி மாற்றி வரைய
வாழ்க்கை என்பது சிற்பம்
செதுக்கினால் செதுக்கியதுதான்
நேசிப்பது எல்லாம் கிடைத்துவிட்டால்
கண்ணீர் துளிகளுக்கு மதிப்பில்லை
கிடைப்பதை எல்லாம் நேசித்துவிட்டால்
கண்ணீருக்கு வழியில்லை

## எப்போது

துன்பம் போய்
இன்பம் வருவது எப்போது!
தோல்விபோய்
வெற்றி வருவது எப்போது!
சாதி மதமின்றி
வாழ்வது எப்போது!
என் வாழ்வின் கருமை நீங்கி
பசுமை வருவது எப்போது!!!!

M. Rakku

B.Ed II year



## அப்துல் கலாம் அவர்களின் நினைவுகள்

பாரத தாயின் தவப்புதல்வன்
ஏழையாய் பிறந்தவன்
களத்தில் சிறந்தவன்
விண்கலத்தின் நாயகன்
குடியரசை ஆண்டவன்
எளிமையாய் வாழ்ந்தவன்
தமிழுக்குப் பெருமை சேர்த்தவன்
தமிழனாய் தமிழ்நாட்டிற்கும்
பெருமை சேர்த்தவன்

K. Sowmiya

B.Ed II year



## அழகு

தென்றல் அழகு தான்

புயலாக மாறாத வரை!

மழை அழகு தான்

வீடு ஒழுகாத வரை

மின்னல் அழகு தான்

கண்ணைப் பறிக்காத வரை!

சூரியன் அழகு தான்

சுட்டெரிக்காத வரை!
கடல் அலை அழகு தான்
அடித்துச் செல்லாத வரை!
மலர் அழகு தான்
வாடாத வரை!
உடல் அழகு தான்
உயிரோட்டம் உள்ள வரை!
இளமை அழகு தான்
முதுமை தீண்டாத வரை!
எல்லாம் அழகு தான்
எல்லை மீறாத வரை!

## வீணை மீட்டும் விரல்கள்

பெண்மையின் சின்னம் மென்மை-அன்று
மண்ணைப் பார்த்தவளே-இன்று
விண்ணை வென்றவளே- நாளும்
உன்னை எண்ணியே பெண்ணை வியக்கிறேன்
இறக்கைகள் இல்லாத இப்பிறப்பில்
சிறகை விரிக்கத் துடிக்கும்
பறவை உரைக்கும் சிறு கவிதை
உன் கண்களில் உண்மை அழகு!
வார்த்தைகளில் மென்மை அழகு!
வாழ்வினில் நேர்மை அழகு!
உன்னை அடிமையாக்க ஆசைப்படும்
அற்பர்களிடத்தில் உன் உண்மை அழகு!
வீணை மீட்டும் விரல்களால்
விதியை மாற்ற வந்தோம்

R. Laila bhavatharani

B.Ed I year



## வரம்

கணவனின் வருமானத்திற்கேற்ப
தன்னுடைய தேவைகளைக் சுருக்கிக் கொள்ளும்
பெண் மனைவி அல்ல!
ஒரு வரம்.....

## அம்மா

அன்பைச் சொல்ல
ஆயிரம் உறவு இருந்தாலும்
அதை அன்பாய் சொல்ல
அம்மாவைத் தவிர வேற யாரும்
இல்லை........

## இழப்பு

இழப்பு
நமக்கு கற்றுக்கொடுக்கும்
எப்படி வாழ வேண்டும்
என்பதை.......
இழந்தவை நமக்கு நினைவுபடுத்தும்
இழப்பின் வலி
என்ன என்பதை.....

உன் வேதனை

பலரை சிரிக்க வைக்கலாம்.....

ஆனால்

உன் சிரிப்பு

ஒருவரைக் கூட

வேதனைப்படுத்தக் கூடாது.

மற்றவர்களைக்

காயப்படுத்தும்

புன்னகையை விட

யாரையும் காயப்படுத்தாத

மௌனம் சிறந்தது........

ஐ ஞ

A.Devi

B.Ed. II year



## பேனா சொல்லும் பாடம்

என் பேனா குல்லா(மூடி) அணிந்திருக்கிறது

எனவே இஸ்லாமியனா?

திறந்தால் முள்முடி (நிப்) தரித்திருக்கிறது

எனவே கிறிஸ்து பிரானா?

எழுதினால் பட்டை அடிக்கிறது

எனவே சைவனா?

மூடியின் கிளி நீண்ட நாமம் போலிருக்கிறது

எனவே வைணவனா?

மூடியுடன் கூடிய பேனாவை முழுமையாகப்

பார்க்கிறேன்... ஒன்று(1)என்று தோன்றுகிறது

சிந்தித்துப் பார்க்கிறேன்

எல்லாமே ஒன்று என்று தோன்றுகிறது.

## அகர வரிசையில் எம் கல்லூரி

அன்பில் முதிர்ந்த எம் கல்லூரி

ஆன்றோர் நிறைந்த எம் கல்லூரி

இனிமை அளிக்கும் எம் கல்லூரி

ஈகை சிறக்கும் எம் கல்லூரி

உரிமை நிறைந்த எம் கல்லூரி

ஊக்கம் கொடுக்கும் எம் கல்லூரி

எண்ணம் சிறந்த எம் கல்லூரி

ஏற்றம் தந்திடும் எம் கல்லூரி

ஐயம் நீக்கிய எம் கல்லூரி

ஒழுக்கம் நிறைந்த எம் கல்லூரி

ஓங்கி வளர்ந்த எம் கல்லூரி

ஔவியம் அளிக்கும் எம் கல்லூரி

அஃதே எம் எஸ்.பிரித்தி கல்வியியல் கல்லூரி.

## கல்லூரி

எங்கள் கல்லூரியின் நுழைவாயிலைக் கேளுங்கள்

எங்கள் முகவரியைத் தாங்கி நிற்கும்!

நாங்கள் நடந்து வந்த பாதையைக் கேளுங்கள்

எங்கள் பதிவுகளைத் தாங்கி நிற்கும்

எங்கள் வகுப்பறையைக் கேளுங்கள்

நாங்கள் செதுக்கப்பட்டதைத் தாங்கி நிற்கும்!

எங்கள் நூலகத்தைக் கேளுங்கள்

எங்களின் சிந்தனைகளைத் தாங்கி நிற்கும்!

எங்கள் உணவகத்தைக் கேளுங்கள்

எங்கள் மனபரிமாறுதல்களைத் தாங்கி நிற்கும்!

எங்கள் கலையரங்கத்தைக் கேளுங்கள்

எங்கள் திறமைகளைத் தாங்கி நிற்கும்!

எங்கள் பேராசிரியர்களின் மனங்களைக் கேளுங்கள்

எங்களின் மனங்களைத் தாங்கி நிற்கும்!

எங்களின் கல்லூரியைக் கேளுங்கள்

எங்களின் ஒற்றுமையைத் தாங்கி நிற்கும்!

## Time is precious

Wasting your time,

Will only give you sarrow

If you save your time,

You will see a bright tomorrow

Today you are young,

Tomorrow you will be old,

So why waste your time,

Which is more precious than gold?

Be active and work all the time,

And invest all hopes till you shine

G. Murugeswari

I-year B.Ed



# பேசும் தமிழ்

தடுக்கி விழுந்தால் மட்டும்... அ-ஆ....
சிரிக்கும் போது மட்டும்.... இ-ஈ.....
சூடு பட்டால் மட்டும்......உ-ஊ.....
அதட்டும் போது மட்டும்......எ-ஏ.....
ஐயத்தின் போது மட்டும்.....ஐ.......
ஆச்சரியத்தின் போது மட்டும்....ஒ-ஓ.....
வக்கனையின் போது மட்டும்....ஔ
விக்களின் போது........ஃ
என்று தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன் மொழி
தமிழ் மொழியென்று!!!!

## Mother

M- Movement from god
O-Oscillation of heart
T-Teacher of child
H-Heaven to all
E-Endless affection
R-Real in the world

## கல்வி

வானத்தை நேசித்தேன்

தொட முடியவில்லை

கடலை நேசித்தேன்

தாண்ட முடியவில்லை

காற்றை நேசித்தேன்

பிடிக்க முடியவில்லை

நெருப்பை நேசித்தேன்

தீண்ட முடியவில்லை

கல்வியை நேசித்தேன்

என்னால் கரைகாண முடியவில்லை....

## உண்மை

தோல்விகள் என்பது

உன்னைத் தூங்க

வைக்கப் பாடும்

தாலாட்டு அல்ல

நீ நிமிர்ந்து

நிற்பதற்கான

தேசிய கீதம்!!!

## சுமை

பிறக்காத வரை - குழந்தை

தாய்க்குச் சுமை

தோண்டி எடுக்காத வரை-தங்கம்

மண்ணுக்குச் சுமை

பயன்படாதவரை -பணம்

பெட்டிக்குச் சுமை

*சிந்திக்காத வரை -மூளை*

*தலைக்குச் சுமை*

*உழைக்காத வரை - மனிதா*

*நீ உலகிற்குச் சுமை!!!!*

## பெண்சிசுக் கொலை

*தாயே!!*

*அரசு ஆணைக்கு பயந்தது*

*ஊருக்குள் வரும் -கொடிய*

*விலங்குகளைக் கூட*

*வனத்துறையினரிடம் ஒப்படைக்கிறீர்கள்!!!*

*நாங்கள் என்ன*

*அவைகளை விட கொடியவர்களா*

*கள்ளிப் பாலால் எங்களை*

*கல்லறைக்கு அனுப்புகிறீர்களே!!!!*

## வாழ்க்கை

*கருப்பாய் உள்ள மனிதனின்*

*குருதி சிவப்புதான்*

*சிவப்பாய் உள்ள மனிதனின்*

*நிழல் கருப்புதான்*

*வாழ்க்கை என்பது*

*வண்ணங்களால் அல்ல*

*எண்ணங்களால் தான்......*

P. Jayabharathi

B.Ed-I year



# நட்பு

கண்டதும் கை குலுக்கி
கன நேரத்தில் காணாமல்
போகும்.....
மின்னல் நட்பு!...........
சந்திப்பில் மட்டும்
சரசமாடும்
பிறகு சிந்திக்க மறந்து
போகும்...
தாமரை இலை மேல்
தண்ணீர் நட்பு!........
காரியம் முடிந்ததும்
வீரியம் குறைத்து
விலகிப் போகும்......
சந்தர்ப்பவாத நட்பு!..........
தூரத்தில் இருந்தாலும்
நெஞ்சின் ஓரத்தில்
நினைந்து
கசிந்துருகும்.......
ஓயாத அலை நட்பு!..........
கூட இருந்தே கூடி
மகிழ்ந்திருந்து
குழி தோண்டி புதைத்துப்

போகும்........

கூடா நட்பு!......

இன்பமிருக்க

இணைந்திருக்கும்

துன்பம் வரதூரப்

போகும்.......

துச்ச நட்பு!.........

நித்தியம் என்று சத்தியம்

செய்யும்

புரிதலில் பிணக்கு

கொண்டு பிரிந்து

போகும்.......

புத்தி கெட்ட நட்பு!......

நட்பின் தொடக்கம் முதல்

நாடித் துடிப்பின் அடக்கம்

வரை- கூடி வரும்......

உயிர் நட்பு!......

ஐ ஒ



K.Dhanalakshmi

B.Ed. I year

## நட்பு

வலியும், வழியும்

துணையாய்

வருவது நட்பு

உயிரும், மெய்யும்

உயிரிமெய் ஆவது நட்பு

விழியும், இமையும்

இணைவது நட்பு

குரலும், இசையும்

இணைவது நட்பு

மழையும், மண்ணும்

இணைவது நட்பு

முள்ளும், மலரும்

ஒருங்கிணைவது நட்பு

துன்பத்தில் இன்பம்

களைவது நட்பு

உணர்வுகளில்

ஒன்று பட்டு

உள்ளத்தில் இணைவது

நட்பு

யோசித்து வருவது

சொந்தம்....

நேசித்து வருவது

காதல்......

யோசிக்காமலும்

நேசிக்காமலும்

வருவதுதான் நட்பு.....

இதுதான் நட்பு.......

G.Kowsalya
B.Ed I-year



## தாய்

தத்தி தவழும் வயதில் பாலூட்டி
தானாக பேசும் வயதில் சோறுட்டி
புன்னகை சிரிப்பால் என் மனதை
வெல்லும் புன்னகை அரசியே
எனக்கு உயிர்தந்து என் உணர்வுகளோடு கலந்துவிட்டாய்
கடல் அலைகளாய் வந்து காற்றாக
என்னை விட்டு பிரிந்து விட்டாய்
உன்னை காண ஆசை!
உன் கருவில் சுமந்த என்னை
என்கருவில் சுமக்க ஆசை
என்ஆசையை நிறைவேற்றுவாயா இல்லையா
உன் புன்னகை நிலவுக்கு வெளிச்சம் தருவாயா

## அம்மாவின் உறவு

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உன்னோடு உணர்வுகளை காண ஆசை
மழைத்துளிகளில் உன் முகம் காண ஆசை
கொஞ்சி உன் கண்ணத்தில் முத்தமிட ஆசை
மேகக் கூட்டங்களிடையே தோன்றும் நட்சத்திரங்களை போல
என் குடும்பத்தில் ஒளிவிளக்காய் தோன்றினாய் தாயே

பூத்துக் குழுங்கும் பூக்களைப் போல உன் புன்னகை

உண்மகளை அழகுபடுத்த புன்சிரிப்பில் பூவாய் தோன்றினாய்

தோழியாக வந்து தொல்லை தந்தாய்

ஆனால் உன் கருவில் தொலைதூரம் என்னை சுமந்தாய்

அன்னையாக வந்து அன்பை தந்தாய்

அருகில் இல்லாமல் என்னை விட்டு

தொலை தூரம் சென்றாய்

அடுத்த ஜென்மன் உன் தாயாக பிறக்க

உன் புன்னகை காண ஆசை.

ஐ ஏ

T. Balanathiya

Iyear B.Ed



## ஏமாற்றம்

காற்றடித்து கலைந்தது மேகம்

கலைந்தது மேகம் மட்டும்

அல்ல....

என் இதயமும் கூட

அவள் சொன்ன

அந்த ஒரு வார்த்தையில்

Brother.....!

## அம்மா

முகத்தை காணும் முன்பே

நேசிக்க தெரிந்தவள்

தாய் மட்டும் தான்!

நான் கருவறையில் இருக்கும் போது

எவ்வளவு தான் தவறு

செய்திருந்தாலும் அதனை

தண்டிக்காமல் மன்னிப்பவள்

தாய் மட்டும் தான் !

அனைத்திட ஆயிரம்

சொந்தங்கள் இருந்தாலும்

உன்னை போல் அன்பு

காட்ட யாரும் இல்லை

அம்மா.......!

## பிரிவு

நம்மை விட்டு

பிரிந்தவர்களுக்காக

நம் பேச்சை கேட்காமல்

பிரிந்து செல்கிறது

நம் கண்ணீர்.....!

கண்ணீர்

காயத்தின் வலியோ

வேதனை!

மனதின் வலியோ

சோதனை!

கண்களின் வலியோ

கண்ணீர்.......!

G.Usha

B.Ed II year



## அப்பாவின் பிரிவு

அப்பா......

உன் உருவத்தின் சாயலாய்

என்னைப் பெற்றாய்

ஆனால்,

உன் நிழல்கூட என்மேல்படாமல்

ஏன் பிரிந்து சென்றாய்

பத்து மாதம் சுமந்து பெற்றவள்

என்பக்கத்தில் இருந்தாலும்

பத்து நிமிடம் தலைவைத்து படுக்க

உன் மடியையே தேடுகிறேன்

மனிதனாய் பிறந்ததற்கு நான்

பெருமை கொண்டதில்லை அப்பா

உன் மகனாய் பிறந்ததற்காகத்தான்

நான் பெருமை கொள்கிறேன்....

நீ இல்லாத இப்பிறவி

எனக்கு முழுமையாயில்லை...

நீ அழைக்காமல் என்

பெயர் கூட எனக்கு பிடிக்கவில்லை

நீ ஊட்டாமல் எந்த உணவும்

எனக்கு இனிமையாயில்லை

உன்னை நினைக்காமல்

நான் என்றும் இருந்ததில்லை

உயிர் கொடுத்துவிட்டு

உறவை அறுத்துச் சென்றாய்!

உன் வாசம் தேடும் எனக்கு

பாசம் மறைத்து சென்றாய்!

உன்னையே யோசித்து யோசித்து

சோர்ந்துபோகிறேன்.....

என்னை யோசிக்காமல்

பிரிந்துபோனது ஏன்?

“தந்தை” என்ற அடையாளம்

தந்தேன் உனக்கு...

“தந்தை இல்லா பிள்ளை” என்ற

அடையாளம் தந்தாய் எதற்கு?

உலகமே எனக்கு துணையாய் கிடைத்தாலும்....

உன் சுண்டுவிரல் பிடித்து

நடக்கும் வரமே கேட்பேன்.....

என்னதான் பூக்கள் அழகாய் பூத்தாலும்......

என் புன்னகைக்கு ஈடாகாது

என்றே நினைத்துக்கொள்வேன்.

உன்னை பார்க்கும் வரம் ஒன்று

கிடைத்தால் போதும்

ஒரு நிமிடப்பிறவி என்றாலும்

மீண்டும் பிறப்பேன் அப்பா......

அப்பா.......!

உன் உணர்வுகளின்

*பிறப்பிடமும் நீதான்*

*என் எண்ணங்கள் அனைத்திற்கும்*

*வித்தும் நீதான்.....*

*என்றும்.....இன்றும்.....*

*என் அன்பிற்கு முன்னுரிமை நீ மட்டும்தான்.....*

## வாழ்க்கை

*வாழ்க்கையின் ஒவ்வொரு*

*தருணங்களையும்*

*இஷ்டப்பட்டு கடந்து செல்லுங்கள்*

*கஷ்டப்பட்டு கடத்தாதீர்கள்*

## *நட்பு*

*நீ எனக்கு தானாய் கிடைத்த*

*சொந்தம் அல்ல...*

*தவமாய் கிடைத்த பந்தம்...*

*முகம்பாராமல் வந்த நட்பு இது !*

*என்றாலும்,*

*அகம் மகிழும் உன்னை நினைக்கும்போது!*

*உன் நினைவு இருக்கும் வரை*

*நீக்கி விடாதே- என்நினைவை!*

*நான் இருப்பேன் என்றும்..*

*அறிவுரை கூறும் தந்தையாக!*

*அன்பு காட்டும் தாயாக!*

*தோள் கொடுக்கும் தோழியாக!*

*செல்ல சண்டைபோடும் சகோதரியாக!*

மறக்க முடியாத நினைவும் நீதான்......
வெறுக்க முடியாத உறவும் நீதான்......
என் தேடலில் கிடைத்த
சிறந்த பொக்கிஷம் நீதான்....
இது வெறும்....
இதழ்களில் விரிந்த பேச்சு அல்ல
இதயத்தில் உணர்ந்த நெகிழ்ச்சி
உன் இதயக்கூட்டுக்குள்
என் நட்புக்காக
புள்ளி இடம் கொடு போதும்
முற்றுப்புள்ளியாக அல்ல......
தொடரும் கமா(')வாக.....

## தாய்மை

"தனக்கு" என்ற வார்த்தையை விரும்ப தெரியாதவள்
"தியாகம்" என்ற உடையை உடுத்தி கொள்பவள்
"அன்பு" என்ற கனியை ருசிக்க தருபவள்
"ஆசை" என்ற அணிகலன்களை அணிய மறுப்பவள்
பத்து மாதம் வயிற்றில் சுமந்து
வாழ்வு முழுவதும் இதயத்தில் பதித்தவள்.....
உறவாய்கூட நினைக்க மறுக்கும்
சொந்தங்களுக்கு நடுவில்
என்னை உயிராய் நேசிப்பவள்
என் தாய்

D.Vinotha

Iyear B.Ed



## பெண்ணின் பெருமை

கையெடுத்து வணங்கிடவே -பெண்களை

கடவுளாய் சிலை வைத்தோம்....

அன்னை மொழி அன்னை பூமியென

அன்புக்கு மேலாய் நிலை வைத்தோம்.....

பெண்மையை அழகு பெண்மைக்கு

அழகு மென்மை......

விண்வெளிக்கு சென்று வின்னை தொட்டாள்

இம்மண்ணுலகை வென்றாள்......

கருவை அமைத்து பிள்ளை பெற்றாள்

கலந்து மேட்டில் துண்ப நீங்க துன்பட்டாள்

இவையே நாட்டின் தாய்மையை

பெண்ணின் பெருமையை.......

உத்தம் விவசாயிகள்

விதியினை விதைத்து விட்டு

வியர்வை பாய்ச்சிவிட்டு

விளைச்சலை காணும்

விஞ்ஞானிகள் இவர்கள் !

பாடுபட்டு உழைப்பதை

பலருக்கு கொடுத்துவிட்டு

பழைய உணவையே

வியர்வையை வித்தாக்கி

உதிரத்தை உரமாக்கி

உணவு தரும் உத்தமர்கள்!

## நட்பு

மரங்களுக்கிடையே இருக்கும் கிளைகளை போல!

கிளைகளில் இருக்கும் கிளிகளை போல!

மேகங்களில் இருக்கும் நட்சத்திரங்கள் போல!

நம் இருவருக்கும் இடையே உள்ள நட்பு

செடிகளிடையே பூக்கும் பூக்களை போல

பூத்து குலுங்கும்......

## இதயம்

உன்னை நம்பி உன்னிடம்

என் இதயத்தை கொடுத்துவிட்டதால்

இதயமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்....

பத்திரமாக பார்த்துக்கொள்

நான் இதயத்தோடு வாழ்வது

இப்போது உன்கையில்.....!




மு.முனீஸ்வரி

Iyear B.Ed


## எதிர்மறை எண்ணம் வேண்டாமே

தான் படிக்கும் படிப்பு பிடிக்கவில்லை என நினைக்கும் நீ

படிக்கவே வசதி வாய்ப்பு இல்லாத பிள்ளைகளை

நினைத்துப் பார்க்க மறக்காதே

தான் உண்ணும் உணவு சரியில்லை என சினைக்கும் நீ

ஒருவேளை உணவைக் கூட காணாதவர்களை

நினைததுப் பார்க்க மறக்காதே

தன்கணவர் சரியில்லை என பெற்றோரிடம்

குறைகூறும் நீ

இன்னமும் முதிர்கன்னியாகவே வாழ்க்கையை

கழிப்பவர்களை நினைத்துப்பார்க்க மறக்காதே

குழந்தைகளை ஓயாது குறைகூறும் பெற்றோர்களே(நீ)

குழந்தைப்பேறுக்காக கோவில்களாக சுற்றும்

பெற்றோரை நினைக்க மறக்காதே

தன் பெற்றோரை சரியில்லை என திட்டும் நீ

பெற்றோரை இழந்து வாடுபவர்களை

நினைத்துப் பார்க்க மறக்காதே!

இதுவரை வாழ்க்கையை வெறுப்போடு கழித்த நீ

தன்னம்பிக்கையோடு போராடி

கிடைத்ததற்காக கடவுளிடம்

நன்றி சொல்ல மறக்காதே

## வாழ்க்கை

வரலாறு படிப்பது மட்டுமல்ல வாழ்க்கை

வரலாறு படைப்பதும் தான் வாழ்க்கை

பணத்தில் நிறைவுகாண்பதல்ல வாழ்க்கை

மனதில் நிறைவு காண்பதும் தான்வாழ்க்கை

பிறரை உயர்த்தி வாழ்வதல்ல வாழ்க்கை

உயர்ந்து வாழ்வதும் தான் வாழ்க்கை

நீதி நிலைக்க வாழ்வதல்ல வாழ்க்கை

நீதி நிலைக்க வாழ்வதும் தான் வாழ்க்கை

நீ நினைக்க வாழ்வதல்ல வாழ்க்கை

அடுத்தவர் மனதில் நீ நிலைக்க

வாழ்வது தான் வாழ்க்கை

## சாதனை

சோதிக்க வந்தவன் தான் கடவுள்

சாதிக்க வந்தவன் தான் மனிதன்

அதனால்

சோதனையை கடந்து சாதிப்போம்.....

யார்? அதிகமாக சிரிக்கிறார்களோ

அவர் மனதில் தான் அதிகமான

காயம் இருக்கும்.

## வாழ்வில் கடைபிடிக்க வேண்டியவை

நட - அதிர்வின்றி

பேசு - பணிவாக

உண்ணு - அளவாக

சுவாசி - இதமாக

தூங்கு - அமைதியாக

உடுத்து - அழகாக

செயல்படு - அச்சமின்றி

உழை - உண்மையாக

சிந்தி - சுயமாக

நம்பு - சரியாக

பழகு - நாகரிகமாக

திட்டமிடு -முன்னதாக

ஈட்டு - நேர்மையாக

சேமி - அளவாக

செலவிடு -யோசித்து

நேசி - பேதம் கடந்து

## நேசிப்பு

காற்றை நேசித்தேன் காண முடியவில்லை
கடலை நேசித்தேன் குடிக்க முடியவில்லை
விண்ணை நேசித்தேன் தொட முடியவில்லை
தமிழ்துறை முனீஸ்வரி இந்த கல்லூரியை நேசித்தேன்
மறக்க முடியவில்லை

## பெண்ணின் பெருமை

பெண்களின் துயரம் தொடர்கதையா? உயர்
பெண்மை உலகின் விடுகதையா?
பொல்லா வரதட்சணைகள் பொருள்கள் கேட்டு
பாவையரை விலைபேசும் போக்கும் வேண்டாம்
அன்று வீட்டை ஆட்சி செய்ததும் பெண்
இன்று நாட்டை ஆட்சி செய்வதும் பெண்
விண்ணுலகில் சாதனை படைத்ததும் பெண்ணே!
மண்ணுலகில் பல சரித்திரம் படைத்ததும் பெண்ணே!
தேசத்தின் வளர்ச்சி பெரிது என்று பெண்ணே!
உன் தேகத்தை வருத்திச் சென்றாய்,
எத்துறையிலும் முத்திரை பதித்த
சத்திய திருமகள் நீ
எதற்கும் எப்போதும் தன் நிலை மாறாத
பண்பின் சிகரம் நீ
பெண்ணே உன்னை
காழ் புணர்ச்சி நெருங்காது
கவலைகளும் சூழாது
சிந்தித்து செயல்படுங்கள்!
சீர்தூக்கி முடிவெடுங்கள்!!!!

**U. Nandhini**
B.Ed 1 Year



## பெண்மை

*அடக்கி ஆளும் தன்மை கொண்ட ஆண்மை!*
*அடங்கி போகும் தன்மை கொண்ட பெண்மை!*
*ஆவேசமாய் எழுந்த துணிச்சலின் தேவதை வேலுநாச்சியார்!*
*நம்பிக்கையாய் எழுந்த தன்னம்பிக்கை தேவதை கல்பனா சாவ்லா!*
*ஏதிரியின் கோட்டையை தீயால் சுட்ட தேவதை குயிலி!*
*இரும்பாய் இருந்து இரும்பு பெண்மணியாய் மாறிய கிரன்பேடி.*
*பிறந்த இவ்வுலகில் அடிமையாய் பெண்கள்*
*ஆண்கள் கம்பீரம் காட்டினால் கம்பீரம் என்கிறோம்*
*பெண்மை கம்பீரம் காட்டினால் திமிர் பிடித்தவள் என்ற பட்டம்*
*அப்படி தான் திமிராய் இருப்போம்.*

**K. Navanitha**
**B.Ed 1 year**



**வானவில்**

வானவில்லே,
மழைக் காலத்தில் மட்டும்
வெளியே வருகிறாயே
காரணம்?

பொறாமையால்
சூரியன் உன்னை
சுட்டுவிடுவான்
என்பதாலா....
வானவில்லே,

பகலில் மட்டும் தோன்றுகிறாயே
காரணம்?
நீலவானவன் - உன்
வண்ணங்களை
திருடிடுவான்
என்பதாலா...
வானவில்லே - உன்
வண்ணங்கள் யாவும்
மங்களாய்ப் போயிற்றே
காரணம்?

சேலைக்கு
வண்ணம் பூச்ச
உன்மேல் ஒத்தி ஒத்தியே
எடுத்துவிட்டார்கள்
என்பதாலா.....
வானவில்லே,
எப்போதும் வளைந்தே
தென்படுகிறாயே
காரணம்?

மாசு படிந்த - இந்த
உலக உருண்டையை
உனது வண்ணத்தை
ஊற்றி கழுவுவதற்காக
தூக்கிச் செல்ல
வளைந்து கொடுக்கிறாயா
கைப்பிடியாக....

T. Kalai selvi
B.Ed. I year



**நட்பு**

முன்னோக்கி வளரும்
பகல் போல நம் நட்பு
வளரட்டும் பின்னோக்கி
கரையும் இரவு போல
பிணக்குகள் எந்நாளும்
அகளட்டும்!

உன் முகத்தை பார்த்ததும்
உன் மனநிலையை புரிந்து
கொள்வதில் தாய்க்கு அடுத்த
படியாக நண்பர்களே!

நட்பு என்பது கண்களையும்,
கைவிரல்களையும் போன்றது
விரலில் காயம்பட்டால்
கண்கள் அழுகிறது!
கண்கள் அழுதால்
கைவிரல் துடைக்கிறது!!

**V.Anusuya**
**B.Ed 1Year**



**William Shakespeare – Venus and Adonis**

Even as the sun with purple colour'd face.
Had ta'en his last leave of the weeping
morn.
Rose -'cheek'd Adonis tried him to the chase:
Hunting he lov'd but love he laugh'd to scorn:
Sick – thoughted Venus makes amain unto him.
And like a bold – fac'd suitor gins to woo him.

"Thrice fairer than my self; thus she began,
"The field's chief flower. Sweet above compare.
Stain to all nymphs, move lovely
than a man.

More white and red than doves or roser are;
Nature that made thee, with herself at strike
Saith that the world hath ending with
thy life.

'Vouchsafe, thou wonder, to alight thy steed.
And rein his proud head to the saddle bow;
If thou wil't deign this favour, for thy meed.
A thousand honey secrets shalt thou know;
Here come and sit, where never serpent hisses;
And being set. I'll smother thee with hisses,

**C. Subha shini**

**B.Ed 1 Year**



## வேண்டும்

*மனதில் உறுதி வேண்டும்,*
*வாக்கினிலே இனிமை வேண்டும்*
*நினைவு நல்லது வேண்டும்,*
*நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்*
*கனவு மெய்ப்பட வேண்டும்,*
*கைவசமாவது விரைவில் வேண்டும்*
*தினமும் இன்பமும் வேண்டும்,*
*தரணியிலே பெருமை வேண்டும்.*

*கண் திறந்திட வேண்டும்*
*காரியத்தில் உறுதி வேண்டும்*
*பெண் விடுதலை வேண்டும்*
*பெரிய கடவுள் காக்க வேண்டும்*
*மண் பயனுற வேண்டும்*
*வானகமிங்கு தென்பட வேண்டும்*
*உண்மை நின்றிட வேண்டும்.*

**E.Thangameenakshi**

**B.Ed. I Year**



## வாழ்க்கை

காலையில் மறைவோம்
　　　　என தெரிந்தும்
தோன்றுகிறது நிலா...!
வெயிலில் காய்வோம்
　　　　என தெரிந்தும்
விழுகிறது பனித்துளி....!
காற்றில் கரைவோம்
　　　　என தெரிந்தும்
இசைக்குது புல்லாங்குழல்...!
மாலையில் உதிர்வோம்
　　　　என தெரிந்தும்
மலர்கிறது மலர்....!
ஒரு நாள் வாழ்வோம்
　　　　என தெரிந்தும்
　　　　ஈசல்....!
ஒரு நாள் வெற்றி பெறுவோம்
　　　　என்று பயணிக்கிறோம் வாழ்வில்
தோல்வியை சந்திப்போம்....!
ஒரு நாள் இறப்போம்
என தெரிந்தும்
பயணிக்கிறோம் வாழ்வில்....!

## அம்மா

உன் அரவணைப்பில் இருந்தவரை
வெயிலோ மழையோ என்னைத்
தீண்டியதில்லை!

*உன் கை பிடித்து நடந்தவரை*

*கல்லோ முள்ளோ என்னைக் காயப்படுத்தியதில்லை!*

*உன்னுள் இருந்தவரை*

*அழுகை என்பது அதிசய நிகழ்வு*

*உன் மடியை விட பாதுகாப்பான இடம்*

*அதுவரை நான் அறிந்ததில்லை!*

*நான் நோயற்ற நேரங்களில்*

*விழித்திருந்து உன் விழிகளே*

*என் வாழ்க்கை ஒளியேற!*

*உன் வாழ்க்கையை மெழுவர்த்தியாக்கினாய்*

*நீ தந்த உயிர் என்னுள் இருக்கும் வரை!*

*நான் தொழும் தெய்வம் நீயே அம்மா....!*

## வெற்றி

வெற்றியை விட தோல்விக்கு பலம் அதிகம்

வெற்றி: சிரித்து மகிழ வைக்கும்!

தேல்வி: சிந்தித்து வாழ வைக்கும்!



T. Surya

B.Ed 1 Year

## நிழல்

*நீ வெளிச்சத்தில் நடந்தால்*

*உலகமே உன்னை*

*பின் தொடரும்...*

*ஆனால்*

*நீ இருட்டில் நடந்தால்*

*உன் நிழல் கூட*

*உன்னை பின் தொடராது.*

S. Priyanga
B.Ed 1 Year



## வாழ்க்கை தத்துவம்

வாழ்க்கையில் எல்லாம்
கிடைக்க வேண்டும் என்று
எதிர் பார்க்காதே.....
சில விஷயங்கள்
கிடைக்காமல் இருப்பதே
வாழ்க்கைக்கு நல்லது.



R. Devaki
B.Ed 1 Year

## நட்பு

நட்பு என்பது மலரை போல்
அல்ல, ஒரு நாளில் பூத்து
உதிர்ந்துவிடுவதற்கு
அது வானில் இருக்கும்
நட்சத்திரத்தைப் போல!
வானம் இருக்கும் வரை இருக்கும்.



**M. Ramya**
D.T.Ed I year

## உறவுகள்

கருவரையில் இருந்து
இறங்கி
கல்லரையை நோக்கி
நடந்து
செல்லும் தூரம் தான்
வாழ்க்கை.

**P. Aarthi**

D.T.Ed I year



## நட்பு

பேசாமல் சில
நாட்கள்
பார்க்காமல்
பல வருடங்கள்
மயிலிறகுச்
சண்டையில் மனசு
உடைந்த நினைவு
எப்படி மறக்க
முடியுமா?
தொலைத்தது பள்ளியை
மட்டுமல்ல
எங்கோ தொலைத்
தூரம் வாழும்
நண்பனையும்.

ஐ ஜ

**V.A. Snega**

D.T.Ed I year



## அம்மா

ஒரு பறவை மரத்தின் கிளையில்
அமரும் போது
அது எந்த நேரத்திலும்
முறிந்து விடும் என்ற

பயத்தில்
அமருவதில்லை
ஏன் என்றால்
புறவை நம்புவது
அந்த கிளையை அல்ல
அதன் சிறகுகள்.

**Y. Esthar**

D.T.Ed I year



## உறவுகள்

இதயம் ஒரு வினோதமான சிறை....
ஏனென்றால், இதில்
குற்றம் செய்பவர்கள்
மாட்டிக் கொள்வதில்லை....
பாசம் வைப்பவர்கள் தான்
மாட்டிக் கொள்கிறார்கள்.

**V. Abinaya**

D.T.Ed I year



## அப்பா

உன் தேவைகளை
நீ கேட்கும்முன் செய்த
உன் தந்தைக்கு,
அவரின் முதுமை
காலத்தில் அவர்கேட்காமல்
நீ செய்வது தான்
நல்ல பிள்ளைக்கு
அடையாளம்

**G.கௌசல்யா**
*இளங்கலை மாணவி*



## பல்லவர் இலக்கியங்களில் பக்தி

சங்க காலத்தையும் சங்கம் மருவிய காலத்தையும் அடுத்துத் தெளிவாக காணப்படும் காலம் பல்லவர் காலம் ஆகும் சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் ஆண்டனர். இவர்கள் காலத்தை வரலாற்று அறிஞர்கள் இருண்ட காலம் என்பர். கி.பி 550 ஆம் ஆண்டு வரை களப்பிரர் ஆட்சி உச்சத்தில் இருந்தது களப்பிரர்கள் முதலில் பௌத்த மதத்தை ஆதரித்துப் பின்னர் சமண மதத்தை ஆதரித்தனர். தெற்கே பாண்டிய மன்னன் கடுங்கோனும் தொண்டை மண்டலத்தில் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவும் களப்பிரர்களை எதிர்த்துப் போராடி விரட்டினர் இதன் பின்னர் தமிழகத்தில் சற்றேறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் பல்லவர் ஆதிக்கம் தமிழகத்தில் மிகுந்திருந்தது.

### தோற்றம்

தமிழகம் கி.பி 6 ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர் பாண்டியர் ஆகிய இரு வலிமை மிக்க அரசுகளால் ஆளப்பட்டு வந்தது. இக்காலக் கட்டத்தில் தான் வட தமிழ்நாட்டுப் பகுதியில் பல்லவர்களின் ஆதரவோடு சமண, பௌத்த மதங்கள் தழைத்தோங்கின ஆனால் தமிழகத்தில் பண்டைய சமய வாழ்க்கை மரபுகளை மக்கள் மறந்துவிடவில்லை.

சமய மரபுகள் தந்த அருளாளர்கள் தோன்றியதும் பக்தியினால் எங்கும் வீசத் தொடங்கின இத்தகைய அருளாளர்களில் குறிப்பிடத்தக்கவர் காரைக்காலம்மையார் ஆவர் இவரையடுத்துப் பல சமயப் பெரியவர்கள் தோன்றி தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிகோலினர் எனலாம்.

### வளர்ச்சி

பாண்டிய நாட்டு மன்னர்களும் பல்லவ மன்னர்களும் சைவ வைணவ சமயங்களை ஆதரிக்கத் தொடங்கினர் அதனால் தமிழகத்தில் சைவமும் வைணவமும் வேகமாக வளரத் தொடங்கின இது பக்தி இயக்கமாக மலர்ச்சி அடைந்தது தமிழகத்தில் சைவ சமயப் பெரியார்களான நாயனமார்களும் வைணவ சமயப் பெரியார்களான ஆழ்வார்கள் தோன்றிப் பக்தி பாடல்களைப் பாடி ஊர் ஊராகச் சென்று தத்தம் சமயங்களைப் பரப்பி வந்தனர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தியையே போற்றி அதற்கு

இசைவான பாடல்களையும் ஆடல், பாடல் முதலான கலைகளையும் போற்றிப் பாடினார்கள்.

### சைவ வைணவ இலக்கியங்கள்

சைவ சமயம் பழைமையானது சிவபெருமானை வழிபடும் கடவுளாகக் கொண்டது சிவம் என்றால் செம்மை, நன்மை என்று பொருளாகும். அன்பை வளர்த்ததால் சிவம் அன்பே சிவமாயயிற்று. சோழன் கோச்செங்கணான் சிவனுக்கு 78 மாடக் கோவில்களை கட்டியதாகத் திருநாவுக்கரசர் தமது தேவாரத் திருப்பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

சைவப் பெரியாராகிய நாவுக்கரசரும் முதலில் சமணராகவே இருந்தார் சைவத்திற்கு அருந்தொண்டாற்றிய மன்னனாகிய மகேந்திரவர்மனும் முதலில் சமண சமயத்தினை சார்ந்தவராகவே இருந்தான். சமயம் நாடிய மன்னன் திருப்பாதிரிப் பூலியூரில் உள்ள சமணப் பள்ளிகளை இடித்து சைவ சமயக் கோவிலை உருவாக்கிச்சமண சைவ மதங்களுக்கிடையே பூசலேற்பட வித்திட்டான். 27 சைவ சமய பெரியார்கள் பாடிய பன்னிரு திருமுறைகளும் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்ய பிரபந்தமும் சைவ வைணவ இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

### பன்னிரு திருமுறைகள்

தமிழ் உயிர் எழுத்துக்கள் 12 அதைப்போன்று சைவத்தின் உயிர் நூல்கள் பன்னிரு திருமுறைகள் ஆகும். இறைவனைப் பற்றி சைவ அடியார்கள் பாடியுள்ள திருநூல்கள் திருமுறைகள் என வழங்கப்படுகின்றன. இச்சைவ அடியார்கள் பாடியுள்ள பாக்களை பன்னிரு திருமுறைகளாகப் தொகுத்தனர் இவ்வாறு தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பியாவார்.

### முதல் மூன்று திருமுறைகள்

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக அமைந்துள்ளன. இச்சம்பந்தரின் இயற்பெயர் ஆளுடைய பிள்ளை என்பதாகும். சீர்காழியில் அந்தணர் குலத்தில் சம்பந்தர் அவதரித்தார்.

இவரது தந்தையார் சிவபாத இருதயர் தாயார் பகவதியார் இவருக்கும் ஆளுடையபிள்ளை காழி வள்ளல் பரசமயகோளரி என்ற வேறு பெயர்களும் உண்டு இவரை ஆதிசங்கரர் தமது சௌந்தரிய லஹரியில் திராவிடசிசு என்று குறிப்பிடுகின்றார்.

மூன்று வயதில் உமாதேவியாரால் ஞானப் பால் ஊட்டப்பெற்றதால் ஞானசம்பந்தரானார். இறைவன் உமாதேவியாருடன் காட்சிதர அக்காட்சியைக் கண்டு வியந்த ஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என்னும் பதிகத்தைப் பாடினார்.

சிவத்தலங்கள் பலவற்றிற்கும் பயணமாகி நேரில் சென்று பல பாடல்களைப் பாடினார் சென்ற இடங்களில பல அற்புதங்களையும் நிகழ்த்தினார் எனவே நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் எனத் திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் பாராட்டுகின்றார் இவரின் திருமுறைகள் தேவாரம் என்ற திருப்பெயரோடு திருகடைக்காப்பு என்ற சிறப்புப் பெயருடனும் வழங்கப்படுகின்றன இவர் மொத்தம் 4168 பாடல்கள் பாடியுள்ளார் இவரது காலம் கி.பி 7 ஆம் நூற்றாண்டு ஆகும்.

இவர் பல அற்புதங்களை நிகழ்த்தினார் திருமறைக் காட்டில் மூடிய கோவில் கதவுகளைப் பாடித் திறக்கச் செய்தார் மயிலாப்பூரில் சிறுவயதில் இறந்து போய்க் குடத்திற்குள் சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை அப்பொழுதிற்கு உரிய வயது இளமை அழகுடன் உயிர் பெற்றெழச் செய்தார் அப்பொழுது சம்பந்தர் பாடிய பாடல்கள் பூம்பாவைத் திருப்பதிகம் எனப்படுகிறது.

“மட்டிட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல்கணத்தார்க்
கட்டிடல் காணாதே போதியே பூம்பாவாய்”

என்பது அப்பதிகத்தின் முதற்பாடலாகும் இப்பதிகம் முழுவதும் காணாதே போதியோ பூம்பாவாய் என முடிகிறது.

பதினொராவது பாடலில் தனது பெயரையும் ஊரையும் குறிப்பிட்ட பின்னர் பதிகத்தைப் பாடுவார் அடையும் பயன்களைக் கூறும் முறையில் அமைத்துள்ளார். இப்பாடல்கள் பதிகங்களின் காப்பகக் கடைசியில் அமைக்கப்பட்டுள்ளதால் தான் இவரது தேவாரமே திருக்கடைக்காப்பு எனச் சிறப்பிக்கப்படுகின்றது. சம்பந்தர் இறைவனைத் தந்தையாகக் கருதி பாடியவர் இறைவனோடு மகன் உறவு பூண்டதால் சம்பந்தரை சைவர் உலகில் பிறந்த சத்புத்திரன் எனப் புகழ்கின்றனர் இவரது மார்க்கம் சத்புத்திர மார்க்கம் ஆகும்.

சம்பந்தர் பாடல்களில் யாப்பும் சந்தமும் இணைந்து அழகு செய்கின்றன. பண்ணுக்கேற்பவே இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. யமகம் திரிபு ஏகபாதம் போன்ற சொல்லணிகளைக் கொண்டு அமைகின்றன இவரது பாடல்களுக்கு மந்திரங்களுக்குரிய வலிமையுண்டு என்பர்.

**நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள்**

நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளைப் பாடியவர் திருநாவுக்கரசர் ஆவார். இவற்றை திருநேரிசை, திருக்குநற்தெதை, திருத்தாண்டகம் என்று வழங்குவர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள

திருவாமூரில் புகழனார்க்கும், மாதினியார்க்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். சமண சமயத்தில் இருந்தபோது இவருக்குத் தருமசேனர் என்ற பெயர் வழங்கப்பட்டது.

தனது நோய் நீங்கப் பெற்ற மருள்நீக்கியார் சைவ மதத்திற்கு மாறினார். தனது நோய் நீங்கவே, 'கூற்றாயினவாறு விலக்கினார்' என்ற பாடலைப் பாடி இறைவனை வணங்கினார். இவரது பாடலைக் கேட்ட இறைவன் இவருக்குத் திருநாவுக்கரசர் என்ற பெயரை வழங்கினார்.

உழவாரப் படை கொண்டு கோயில் தோறும் சென்று உழவாரப் பணியை மேற்கொண்டார். இதனால் இவருக்கு உழவாரப் படையாளி என்ற பெயர் ஏற்பட்டது. இவரது நெறியை 'தாச மார்க்கம்' என்பர். கோயில்கள் தோறும் சென்று இனிமையான நற்கருத்துக்களால் பாடியதால் இவரை வாக்கிற்கு ஈசர் என்ற பொருளில் 'வாகீசர்' என அழைத்தனர்.

இவர் பாடிய பதிகங்கள் 313 இதில் மொத்தம் 3066 பாடல்கள் உள்ளன திருநாவுக்கரசர் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற கொள்கையில் நின்று உழவாரப் பணி மேற்கொண்டார். மேலும் நாவுக்கரசர் சமணத்தில் இருந்து சைவராக மாறியதும் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அவருக்கு பல்வேறு இன்னல்களைச் செய்தான். சுண்ணாம்புக் காளவாயில் ( திருநீற்றரை ) உயிரோடு நாவுக்கரசரை இட்டான். நாவுக்கரசர் இறைவன் மீது கொண்ட மாறாத நம்பிக்கையில்.

"மாசில்வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று பாடவே இறைவன் அவரை வேகாமல் நலமுடன் காத்தார். நாவுக்கரசரின் உடலில் கல்லைக் கட்டி அவரைக் கடலிலே தூக்கி அரசருடைய ஏவலாளர்கள் போட்டனர்.

அப்பரின் பாடல்கள் பணிவும், குழைவும் கொண்டன. இவரது பாடல்களை மட்டுமே, தேவாரம் என்று சிறப்பித்துக் கூறுவர். மேலும் சங்கம் என்ற சொல்லை இலக்கியத்தில் முதல்முதலில் 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழி தருமிக்கருளினோன் காண்' என்னும் வரிகளில் இவரே குறிப்பிடுகின்றார். இறைவனை அடைந்தால் அனைத்துத் துன்பங்களும் நீங்கும் என்பது இவருடைய பாடல்களின் அடிப்படை மந்திரமாக விளங்குகின்றது.

**முடிவுரை**

சங்க காலத்தையும் சங்கம் மருவிய காலத்தையும் அடுத்தக் காலம் பல்லவர் காலம் எனக் குறிப்பிடலாம் மூன்று நூற்றாண்டுகள் தமிழகத்தில்

பல்லவர் ஆதிக்கம் மிகுந்திருந்தது வட தமிழ்நாட்டில் பல்லவர்களின் ஆதரவோடு சமண பௌத்த மதங்கள் தழைத்தோங்கி இருந்தன பாண்டிய நாட்டு மன்னர்களும் பல்லவ மன்னர்களும் சைவ வைணவ சமயங்களை ஆதரிக்கத் தொடங்கினர் சைவம் வைணவம் வேகமாக வளரத் தொடங்கின இது பக்தி இயக்கமாக மலர்ச்சி அடைந்தது.

**கட்டுரைக்கு பயன்படுத்திய நூல்கள்**


*1.முனைவர்.சி. சேதுராமன், தமிழ் இலக்கிய வரலாறு.*

*2.பு.அருணாச்சலம், பக்தி இலக்கியம்.*

*3.முனைவர். தமிழண்ணால், தமிழ் இலக்கிய வரலாறு.*


************




**கா.கனகவள்ளி**
இளங்கலை மாணவி


# கணினியில் தமிழ் வளர்ச்சி

நாகரிக மேம்பாட்டிற்கு ஏற்றவாறு, தமிழ் சமூகம் மொழியை வளப்படுத்தியும், செழுமைப்படுத்தியும் வளர்ந்துள்ளதை தமிழக நாகரிக வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ளலாம் கல்வெட்டுகளில் செதுக்கப்பட்ட தமிழ்மொழி ஓலைச் சுவடிகளிலும் எழுதப்பட்ட தமிழ்மொழி, கணினி தமிழாக வளர்ந்திருப்பது தமிழ்மொழி பண்பட்டது என்றும் புதுமையில் செழுமை அடைந்தது என்பதையும் நமக்கு காட்டுகின்றது. மன்னர்கள் காலத்தில் சங்கங்கள் மூலம் தமிழ் வளர்க்கப்பட்டது. பாடல் வடிவமாக தமிழ் முதன்முதலில் உபயோகிக்கப்பட்டது. இன்றைய கணிப்பொறி காலத்தில், கணினி மூலம் வளர்க்கப்பட்டு வருகின்றது.

மதங்களினால் மொழி வளர்ந்தது. கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தால் மொழி வளப்படுத்தப்பட்டது. கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தோடு இணைந்த மொழியாகவும், எல்லையில்லா பயனையும், எல்லையில்லாத நன்மையையும் தரும் வகையில் தமிழ்மொழி இருக்கின்றது. மொழியின் வளர்ச்சி, அதனை உபயோகப்படுத்தும் வழிகள், இலக்கணம், உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு முறை இவற்றால் காலங்கள் கடந்தாலும், புதிய தலைமுறைகள் உருவானாலும், என்றும் முன்னேற்றமான நிலையில் தமிழ்மொழி இருப்பதை நாம் காண முடிகின்றது.

**கணினியும் தமிழும்**

கணினியில் தமிழை இலக்கியமாகவும், தமிழை இசையாக்கியும், தமிழைப் படமாக்கியும் பார்க்கவும் முடியும் சங்கிலிகளில் வளர்நத தமிழ் மொழி கணிப்பொறிகளில் காலூன்றி வளர்ந்து வருவது, தொன்மையான தமிழ், தொழில் நுட்பத்தோடு இணைந்த தமிழாக மாற இருப்பதைக் காட்டுகின்றது. இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு தமிழ்மொழி உலக மொழிகளுக்கு முன்னால் வெற்றி நடைபோட்டுச் செல்கின்றது. அனைத்து மொழிகளிலேயும் சிறந்த ஆட்சி மொழியாக, ஆளும் மொழியாக தமிழ் திகழ்கின்றது. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்ற கூற்றை உலகினர் அனைவரும் உணரும் வண்ணமாக தமிழ்மொழி வளர்ந்துள்ளது.

கணினிக் கலையில் உலக அளவிலேயே ஆங்கிலேயர்களுக்கு அடுத்து இன்று இரண்டாமிடத்தில் தமிழர்கள் இருப்பது. தமிழினத்தின் வருங்காலம் ஒளிமயமாக இருக்கும் என்பதைப் பறைசாற்றுவதாகும். இதற்கு தமிழர்கள் மட்டுமல்ல, தமிழும் ஒரு அறிவியல் மொழியாக இருப்பதும் காரணமாகும். ஆதலால்,

“ஆய்வுகள் மேலோங்கும் அறிவியல் பூக்கும்
அன்னைநிலம் சொர்க்கமாகும்
தோய்வுளம் இன்பமடையும் துன்பங்கள் நீங்கிடும்
தொல்லுலகைத் தமிழே ஆளும்”

என நாட்டும் அவருடைய நம்பிக்கை நடக்கப்போகும் உண்மையும் ஆகும்.

**கணினியின் இயக்கம்**

கணிப்பொறி என்பது ஒரு மின்னனு இயந்திரம் ஆகும். இவை கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச் செயல்பாடுகளை கணிப் பொறியால் செய்யமுடியும். கணிப்பொறியால் தகவல்களைச் சேமித்து வைக்க முடியும். அதனைப் பிறகு எத்தனை முறை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அது ஒரு வினாடியில் பல்லாயிரக் கணக்கான செயல்களை அதிவேகத்தில் தவறில்லாமல் செய்யும் தன்மை உடையது. கணிப்பொறியில் கணக்கீடு என்ற சொல் எண்கணித கணக்குகளையும், கணிப்பீடு என்ற சொல் அளவிடுதல், மதிப்பிடுதல் போன்ற செயல்களையும் செயல்படுகின்றன.

தொடக்க காலத்தில் நிரலரே கணிப்பொறியுடன் நேரடித் தொடர்பு கொண்டு தங்கள் நிரலை இயக்கினார். பல அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் பல பொதுவான செயல்பாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது. இவற்றை ஒருமுறை எழுதிவைத்து தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளலாம்

என்று உணரப்பட்டது. இத்தகைய நிரல்களின் தொகுப்பு, நிரல் நூலகங்களாக வைக்கப்பட்டன. நிரல் நுலகங்களைப் பயன்படுத்தும் போது, கணினியின் இயக்கம் சற்று சிக்கலானது. கணிப்பொறியை இயக்குவதற்கு என கணிப்பொறி இயக்கு பணியாளர் தோன்றினர்.

**டபிள்யூ என் தமிழ்**

வாஷிங்டன் தமிழ் என்பது கரோல்ட் எப்.சிப்வ்மேன் என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு புகழ் பெற்ற தமிழ் பாண்ட் ஆகும். தாமஸ் ரிட்ஜ்வெயின் உடன் கூட்டு முயற்சியால் இந்த தமிழ் பாண்ட் உருவாக்கப்பட்டதாகும. டேக்ஷில் டபிள்யூ என் தமிழ் பாண்ட் பயன்படும்படியாக இருக்கின்றது. யூனிக்ஸ் மற்றும் எக்ஸ்விண்டோ பிளாட்பாம்களில் எக்ஸ்லிகப்ஸ் போன்ற தமிழ் பேக்கேஜ்கள், தமிழ் டெக்ஸ்ட்களை தயார் செய்ய உதவுகின்றன.

**தமிழ் வேர்ட் 2001**

நியூடெல்லி ஏப்ரல் 13ம் தேதி தமிழ்வேர்ட் 2001 ரோமன், ரோமன்-தமிழ், தமிழ் டைப் ரைட்டர் போன்ற யூசர் தோழமை கீபோர்ட்களை தமிழ்வோர்ட்-2001 தருகின்றது. இந்த சாப்ட்வேர் ஸ்பெல் செக், கிராமர் செக், சாந்தி செக், சார்ட்டிங், இன்டெக்‘ஜீங் போன்ற பரந்த எல்லைக்குட்பட்ட மொழிக்கான டூல்ஸ்களை பெற்றிருக்கின்றது.

**தமிழ் கம்யூட்டிங் ஸ்டெண்டர்ட்கள்**

தற்போது பல வருடங்களாக தமிழானது வெப்பில் காட்டப்பட்டு வருகின்றது. பத்திரிக்கைகள் எல்லாம் ஆன் லைனாக இருக்கின்றன. ஒவ்வொரு பப்ளிகேஷனும் பாண்ட் கொண்டு டெக்ஸ்ட்டை காண்பிப்பதில் ஸ்டெண்டர்ட்டான அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன. பத்திரிகை களுக்கு சார்பில்லா குழுக்கள் டேட்டா என்ட்ரி திட்டங்ளைக் கொண்டுள்ள பாண்ட்கள் அதிகம் இருப்பது. டெக்ஸ்ட்டிஸ்பிளேயில் ஒரு யூனிபார்மட்டியை கொண்டு வர உதவியது பிப்ரவரி 1999ம் ஆண்டு சென்னையில் நடந்த தமிழ் நெட் 99 மாநாடு இதைப் பற்றியே விவாதித்தது.

**தமிழ் சம்பந்தமான வெப் பக்கங்கள்**

தமிழ் சம்பந்தமான பல தலைப்புகளுக்குரிய இணையத்தின் இணைப்பை தமிழ் எலக்ட்ரானிக் நூலகம் கொணட்டுள்ளது. தமிழ் போர்டல் சைட்கள், தமிழக அரசு சார்பு நிறுவனங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றின் தொடர்பான இணையங்களில் இணைப்பை தமிழ் எலக்ட்ரானிக் நூலகம் கொண்டுள்ளது. தமிழ் வெப் சைட்களின் தொகுப்பை தமிழ் எலக்ட்ரானிக் நூலகம் கொண்டு உள்ளது.

## தமிழ் எலக்ட்ரானிக் நூலகம்

1950 ம் ஆண்டிற்கு முன்னர் வெளியிட்ட தமிழ் நாவல்களின் பட்டியல், 20ம் நூற்றாண்டின் தமிழ் நாவல்கள், தமிழ் ஸ்காலர்களின் பட்டியல், தமிழ் கதைகள், இலங்கைத் தமிழர்கள், தமிழக அரசியல் பண்பாடு ஆகியன பற்றியும் கூறுகின்ற இணையத்தளங்களை இணைக்கின்றதாக தமிழ் எலக்ட்ரானிக் நூலகம் இருக்கின்றது.

"ஆயிர மாயிர ஆண்டுகள் புகழ்பெற்ற

வாய்ப்பெலாம் தேடி வரலாறு படைப்போம்"

என மேற்கண்ட பாடல் விளக்குகின்றது.

## தமிழ் ஆராய்ச்சி மற்றும் இந்திய ஆராய்ச்சி மையங்கள்

பாண்டிச்சேரி இன்ஸ்ட்டியூட், ஆசியக் கல்வி இன்ஸ்ட்டியூட் பன்னாட்டு தமிழ்க் கல்வி, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழிசைச் சங்கம், தமிழ் இசைக் கல்லூரி பற்றியும் கூறுகின்ற இணையத் தளங்களை இணைக்கின்றதாக தமிழ் எலக்ட்ரானிக் நூலகம் இருக்கிறது.

## தமிழ் சார்ந்த இணையத்தளங்கள்

இசை, நடனம் பற்றியும், கர்நாடக சங்கீதம், வீணை இசை, வயலின், புளுட், மிருதங்கம் ஆகியன பற்றியும் தமிழ் பண்பாட்டு கோலங்கள் பற்றியும் கூறுகின்ற இணையத் தளங்களின் இணைப்பைக் கொண்டதாக தமிழ் எலக்ட்ரானிக் நூலகம் இருக்கிறது.

"பல்மொழி பயின்று பல்தொழில் கற்று

உள்ளத்தில் ஊற்றாய் உலகில் உலாவும்

வெல்மொழி கற்றிட வேண்டு மென்னின்

வெல்லுலகை வெல்வதற்கு வேண்டும் கணினி"

என மேற்கண்ட பாடல் குறிப்பிடுகின்றது.

## முடிவுரை

கணினி தமிழ் வளர்ச்சியில் அரசாங்க அணுகுமுறை, அரசாங்கத்தின் முக்கியத்துரைகளில் கையாளுகின்ற தகவல் தொழில்நுட்ப கொள்கை ஆகியவை காணப்படுகின்றன. ஒவ்வொரு இணையத்தைப் பற்றிய ஒரு வரி விளக்கம், இணையத்தள முகவரி ஆகியவற்றை வகைபடுத்தி இவற்றில் காணலாம் இன்டர்நெட்டில் உள்ள தமிழ் எலக்ட்ரானிக் நூலகத்தை பற்றியும் தெளிவாக இந்நூல் கூறுகிறது. தமிழ் சேட்டிங் தமிழில் இமெயில் போன்றவை பற்றிய செய்திகள் இவற்றில் அடங்கியுள்ளது. கணினியில்

தமிழை படமாக்கியும் பார்க்கவும் முடியும். தமிழ் மொழியை கணிப் பொறியில் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்ற வினாவிற்கு விடையளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தோடு இணைந்த மொழியாகவும், எல்லையில்லா பயனையும், எல்லையில்லாத நன்மையையும் தரும் வகையில் தமிழ்மொழி இருக்கின்றது. இது மூலம் ஒவ்வொரு கம்ப்யூட்டரும் தமிழ் வளர்க்கும் கருவியாகவும், தமிழின் அருமை, பெருமைகளை அறியும் வழியாகவும் இருக்கும்.

**கட்டுரைக்கு பயன்படுத்திய நூல்கள்**


1. திரு.இரா. பார்த்தீபன், கல்வியில் கணினி,
2. ராஜமலர், கணினியில் தமிழை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்


************


**எம்.சாலினி,**
இளங்கலை மாணவி




# இன்றைய நிலையில் பெண்களுக்குத் தேவை சுதந்திரமா? இல்லை பாதுகாப்பா?

**"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்,**
**பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்,**
**ஏட்டு மறிவினில் ஆணுக்கிங் கேபெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி?"**

என்னும் பாரதியின் கவிதைக்கேற்ப, பெண்கள் இன்று இல்லாத துறையென்று ஏதேனும் உண்டோ! எனக் கேட்கும் அளவிற்கு பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி விட்டனர், ஆனால் ஆண்களுக்கு, நிகரான சுதந்திரம் பெண்களுக்கு உண்டோ!என்னும் கேள்விக்கு இன்றும் பதிலில்லை. இன்றைய நிலையில் பெண்களுக்குத்தேவை சுதந்திரமா? இல்லை? பாதுகாப்பா என்னும் கேள்விக்கு, இந்தக் கட்டுரையில் விடை காண முயற்சிப்போம்.

**அன்றும் இன்றும்**

'அடுப்பூதும் பெண்களுக்குப்படிப்பெதற்கு' என்பது அக்காலம். ஆனால் இன்று, போட்டித் தேர்வுகளிலும் சரி, அரசுத் தேர்வுகளிலும்

சரி,ஆண்களை விட பெண்களே அதிக அளவு தேர்ச்சி பெறுவதை காண்கிறோம்.

என்னதான் பெண்கள் அனைத்து, துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து விட்டாலும், இன்றும் பிற்படுத்தப்பட்ட கிராமப் பகுதிகளில் வாழும் பெண்களுக்குக் கட்டுப்பாடுகளும், அடக்கு முறைகளும் அதிக அளவில் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. தன்னுடைய கருத்தைச் சுதந்திரமாக வெளியிடக் கூட இயலாத பெண்களும் இந்நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் அக்காலம் போன்று, பெண் சிசுக் கொலை, உடன்கட்டை ஏறுதல் போன்ற கொடூரங்கள் தற்போது இல்லை என்பது சற்று ஆறுதல் அளிக்கும் விஷயமாகும்.

**ஆண்களின் பார்வையில் பெண்கள்**

இந்த நாகரிக உலகினிலும்,ஆண்களைப் பொறுத்தவரை பெண்கள் ஒருபடி கீழே வைத்துதான் பார்க்கப்படுகின்றனர். இது வருத்தமளிக்கும் உண்மையாகும். ஆணுக்கு நிகர் பெண்கள் என்று பெயரளவில் சொல்லிக் கொண்டாலும், பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கும் ஆண்கள் இங்கு மிகக்குறைவே. ஒத்துக்கொண்டாலும், இல்லாவிடினும், ஆணாதிக்க சமூகமே இங்கு அதிகம் காணப்படுகிறது. உதாரணமாக , கணவன்-மனைவி இருவரும் வேலைக்குச் சென்றாலும், மனைவியின் கடமை, குடும்பத்தைப் பார்த்துக்கொள்வது,என்பது எழுதப்படாத விதியாக உள்ளது.சமூகத்தைப் பொறுத்தவரை, சமையல் வேலை பெண்களுக்கே என்று ஒதுக்கப் பட்டுள்ளது. கிராமங்களில் இருந்து பெருநகரங்களாக இருக்கட்டும் பெண்களின் நிலை இதுவே.

**நாகரிக உலகினில் பெண்கள்**

சென்னை, மும்பை போன்ற பெருநகரங்களில் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. உடைகள்,பழக்க வழக்கங்கள், பணி, படிப்பு என அனைத்திலும் ஆண்களுக்கு நிகராகவே, பெண்களுக்கும் சுதந்திரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சில பெண்கள் அந்த சுதந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தி மது போதை போன்ற தவறான பழக்க, வழக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

மேலும் எளிதாக காதல் வலைகளில் சிக்கித் தங்கள் வாழ்வைச் சிதைத்துக் கொள்பவர்களும் இருக்கின்றனர். ஆனால் அந்தச் சுதந்திரத்தை நல்ல வழியில் பயன்படுத்தும் பெண்களும் இருக்கின்றனர் என்று மறுப்பதற்கில்லை.

**பெண்கள் பாதுகாப்பு**

“பெண்கள் நம் நாட்டின் கண்கள்” இந்த வரிகளை நிறைய இடங்களில் காணக்கண்டிருப்போம். ஆனால் அந்தக் கண்களை, பாதுகாப்பவர்களை,

விட, காயப்படுத்துவர்களே இங்கு அதிகம். நம் நாட்டில் பெண்கள் சில கயவர்களின் பார்வையில் போகப் பொருளாகவே பார்க்கப்படுகின்றனர். சிறுமிகளும், இளம் பெண்களும்,ஏன் சில வயதான பெண்கள் கூட பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். கிராமம், நகரம் என்ற பாகுபாடு இன்றி அனைத்து இடங்களிலும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒரு சிலர் தீயவர்களின் நட்பின் காரணமாகவும்,திரைப்படம், தொலைக்காட்சி, இணையம் போன்றவற்றின் செல்வாக்கின் விளைவாகவும், உடன்பயிலும் மாணவிகளை கேலி செய்வதும், அவதூறுகளைப் பரப்புவதும், கைபேசி மூலம் அவர்களோடு தொடர்பு கொண்டு உரையாடவும் முயல்கிறார்கள். இவர்கள் காதலுக்கும் காமத்திற்கும் வேறுபாடு தெரியாதவர்கள். இன்னும் எத்தனை நிர்பயாக்கள்?எத்தனை சுவாதிகள்? வெளியே தெரியாத எத்தனை நந்தினிகள் நாம் இழக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. காதல் தோல்வியைப் பொருத்தவரை தவறு எவர்மேல் இருந்தாலும் இந்த சமூகம் பெண்ணையே குற்றவாளி ஆக்குகிறது.

**முடிவுரை**

ஆண்களில் கண்ணியமானவர்களும் உள்ளனர். அதற்கு சமீபத்தில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டமே சான்று.ஒரு சில கயவர்களின் தவறான செயல்களால், ஒட்டுமொத்த ஆண் வர்க்கத்தையே தவறாக கணிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. இருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் பெண்களுக்குத் தேவை பாதுகாப்பா? அல்லது சுதந்திரமா என்று பார்த்தால், பாதுகாப்பே அவசியமாகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் துன்புறுத்தல்கள், அடக்கு முறைகள் போன்றவை அழிந்து விட்டாலே, பெண்சுதந்திரம் என்பது நிஜமாகிவிடும் என்பது என் மனக்கருத்தாகும்.

***********



**B.வைசாலி**

*இளங்கலை முதலாமாண்டு மாணவி*

# தாய் மொழிவழிக் கல்வி

இந்தியாவில், நீண்ட காலம் ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்தனர். ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருந்தது. எனவே, அரசுப் பணிகளில் ஆங்கிலம் பயின்ற இந்தியர்கள் மட்டுமே நுழைய நேர்ந்தது. அதனால் தாய்மொழிவழிக் கல்வி புறக்கணிக்கப்பட்டது. அதுகண்டு

வேதனையுற்ற காந்தியடிகள் கல்வி அவரவர் தாய்மொழியில் தான் கற்பிக்கப்பட வேண்டும் எனக்கூறினார்.

### தாய்மொழிவழிக்கல்வி

தொடக்கக்கல்வி முதல் உயர்பட்டப் படிப்புவரை அவரவர் தாய்மொழி வாயிலாகவே கற்க வேண்டும். மொழிப்பாடத்துடன் அறிவியல், வரலாறு, புவியியல், கணிதம், மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை முதலான அனைத்துப் பாடங்களும் தாய்மொழி வழியாகக் கற்பதே தாய்மொழி வழிக்கல்வியாகும்.

### தாய்மொழி வழிகல்வியின் சிறப்பு

ஒருவனது சிந்தனை, அதன் வழியாக விளையும் செயல் அனைத்தும் அவனவன் தாய்மொழியில்தான் இயற்கையாக அமையும். அதனால் கல்வி பெருகும். பாரதியார், திருவள்ளுவர் போன்றவர் பன்மொழி தெரிந்தவர்களே இருந்தாலும் அவர்களெல்லாம் தம் சிறந்த படைப்புகளைத் தத்தம் தாய்மொழியிலேயே படைத்து தாய்மொழிக்குப் பெருமை சேர்த்தனர்.

### தாய்மொழிக் கல்வியின் பயன்கள்

கருத்துகளை எளிதில் புரிந்துகொள்ளத் தாய்மொழிவழிக் கல்வியே சிறந்தது. பிறந்தது முதல் பேசிப்பழகிவரும் மொழியில்தான் கருத்துக்களைச் சரியாகவும், முறையாகவும் வெளியிட முடியும். கதை, கட்டுரை, நாடகம், கவிதை முதலான இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றல் வளர்கின்றது. தாய்மொழி வழியாகக் கற்பதால் காலமும் முயற்சியும் வீணாவதில்லை. கிராமப்புற மாணவர்களும் தம் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியும்.

### அயல்நாடுகளில் தாய்மொழிவழிக் கல்வியே

ரஷ்யாவும், சீனாவும், ஜப்பானும், இங்கிலாந்தும் தத்தம் தாய்மொழி வழிக்கல்வி மூலமே உன்னத இடத்தைப் பெற்றுள்ளன. அங்கெல்லாம் மொழியளவில் மட்டுமே பிறமொழிகளைக் கற்பிக்கின்றனர், கற்கின்றனர்.

### தாய்மொழிவழிக் கல்வி வளர வழிவகைகள்

இந்தியத் துணைக் கண்டத்தில் 18 மொழிகளைத் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்திய மக்களின் தாய்மொழிகளாகிய இம்மொழிகள் வளரவேண்டும். நம் தாய்மொழியாகிய தமிழ் வழியாகவே கல்வி கற்பிக்க அனைத்துத் துறைக் கல்வியும் வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். படிப்பதற்கும் உதவித்தொகை வழங்க வேண்டும். ஆங்கில வழிக்கல்வி கற்றுத் தரும் மழலையர் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**முடிவுரை**

தாய்மொழியே பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும், அமைத்திட வேண்டும். இதற்காக அரசும் மக்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

************



**M.Reshma Roshan**
**B.Ed. I year**

# பெண் கல்வி

**முன்னுரை**

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஆன்றோர் வாக்கு.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்" என்பது திருக்குறள். வள்ளுவன் வாக்கிற்கிணங்க இந்நாட்டின் பெண்கள் கல்வி என்னும் ஒளி பெற்றால் நாடு சிறந்தோங்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. உலகின் மக்கள் தொகையைச் சரிபாதியாக விளங்கும் பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை நல்லோர் அனைவரும் ஏற்றுக் கொள்வார். எனவே பெண்கல்வியைப்பற்றி இங்கு பார்ப்போம்.

**பெண்கல்வியின் அவசியம்**

ஆண் ஒருவன்கல்வி கற்றால் அவர் ஒருவருக்கு மட்டுமே அறிவு வளர்ச்சி அடையும். ஆனால் பெண் ஒருவர் கல்வி கற்றாலோ அக்குடும்பம் முழுவதும் கல்வி அறிவுபெறும். ஏனென்றால் தாயின் மடியிலேயே குழந்தை கற்க ஆரம்பிக்கிறது. எனவே அனைத்துக் குழந்தைகளும் கல்வி அறிவு பெறும்பொழுது குடும்பம் முழுவதும் கல்வி அறிவு பெறுவது இயல்புதானே!

**பண்டைத் தமிழகத்தில் பெண்கல்வி**

புவி ஆளும் மன்னர்கள் கவியாளும் புலவர்களைப் போற்றிப் பராமரித்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. இப்புவி மன்னர்களுக்கு நல்லவற்றை எடுத்துச் சொன்ன புலவர்களில் பெண்களும் அடங்குவர். இப்பெண் புலவர்களில் ஔவையார், வெண்ணிகுயத்தியார், காவற்பெண்டு, நற்பசலையார், பொன்முடியார் போனறவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**பெண்கல்விக்கு எதிரான வாதமும் மறுப்பும்**

பெண்களின் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்த வீணர்கள் சிலர். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்றும் " பெண் புத்தி பின் புத்தி" என்றும் உளறி வைத்தனர். ஆனால் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பாரதியார் "பட்டங்கள்

ஆள்வதும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்றார். அனைத்துலகமும் ஏற்றுக்கொண்ட உண்மை வாக்கு. தொட்டிலை ஆட்டும் கை தொல்லுகை ஆளும் கை ஆகும்.

### பெண்கல்வியின் பயன்கள்

பெண்கள் கல்வி கற்றதால் சமையல் அறையில் முடங்கி கிடந்த பெண் சமுதாயம் சாதனைப் பல புரிந்துள்ளது. இன்று உலகின் பல்வேறு துறைகளிலும் பெண்கள் தங்கள் கடமையை ஆற்றியுள்ளனர். விளையாட்டு துறை முதல் ஆராய்ச்சித்துறை வரை சாதனைகள் நிகழ்த்தும் கல்பனாசாவ்லா முதல் சானியாமிர்சா வரை உதாரணங்களாகின்றனர். ஆசிரியர் தொழிலில் பெரும்பான்மை வகிப்பவர்கள் பெண்களே. இந்திய நாட்டை ஆண்ட இந்திராகந்தி அவர்களும் பெண்தான். உலகின் பல்வேறு நாடுகளிலும் ஆட்சிப் பொறுப்பைப் பெண்கள் ஏற்று நடத்தி காட்டி உள்ளனர். காட்டியும் வருகின்றனர். ஆண்களுக்கு இணையாக பெண்களும் அனைத்துத் துறைகளிலும் சாதனை நிகழ்த்தி வருகின்றனர்.

### முடிவுரை

நாடும் வீடும் நலம் பெறவும் வளம் பெறவும் ஒளியோடு விளங்கவும் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும். பெண்களைக் கடவுளாகத் தொழுகின்ற நாமும் பெண்களைக் கல்வி பெறச் செய்வோம். வீட்டில் விளக்கேற்றும் பெண்கள் உலகிற்கு ஒளியாய்த் திகழ பெண்கல்வியை வளர்ப்போம்.

***********



**K.திவ்யபாரதி**
இளங்கலை முதலாம் ஆண்டு

## இராமேஸ்வரம் தல வரலாறு

### முன்னுரை

இராமாயண கால வரலாற்றோடு தொடர்புடைய இராமேஸ்வரம் இந்திய ஒருமைப்பாட்டின் உறைவிடமாக திகழ்கிறது. நம்நாட்டின் உள்ள புண்ணிய ஷேத்திரங்கள் நான்கில் வடக்கே மூன்றும் தெற்கே ஒன்றுமாக அமைந்துள்ளதோடு, இராமேசுவரம் மட்டுமே சிவஸ் தலமாக அமைய பெற்றது. அதுபோல் 12ஜோதிலிங்கங்களும் இத்திருத்தலமும் ஒன்றாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புடைய இராமேசுவரம் மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் ஆகிய மும்பெருமைகளையும் உடைய புண்ணிய பூமியாகும்.

### தலயாத்திரை தலம் இராமேஸ்வரம்

இந்துக்களைப் பொறுத்தமட்டில், இறைவனைத் தரிசிக்க "தலயாத்திரை" மேற்கொள்வது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒருமுக்கிய பகுதியாகும். அலை ஓசையுடன் கூடிய ஆழமான கடல்களும் அதன் அருகிலுள்ள தீர்த்தங்களும் மிகவும் புனிதமானவையாக கருதப்படுவதுடன் அவைகள் இன்றும் வணங்கப்படுகின்றன. அதே போன்று காசியிலுள்ள கங்கையும் இராமேசுவரத்திலுள்ள சேவும் மிகவும் புனிதமானவையாக விளங்குகின்றன. காசியிலிருந்து தொடங்கப்படும் யாத்திரை இராமேசுவரத்திலுள்ள அக்னீ தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீஇராமநாத சுவாமியைத் தரிசித்த பிறகே நிறைவு பெறுகிறது.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி முடியவும், கல்கத்தா முதல் பம்பாய் வரை உள்ளமக்கள் தினசரி ஆயிரக்கணக்கில் இந்த புண்ணிய தலத்திற்கு வருகைதருவது மூலம் இத்தலமானது தேசிய ஒருமைபாட்டின் உயர்வுக்கு வழிவகுக்கிறது.

### கோவில் தோன்றிய வரலாறு

இராமேசுவரம் என்ற புனித நாமம் இராமசந்திர மூர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஈசன் எழுந்தருளியுள்ள புனிதத்தலம் என்பதே இயல்பாகவே குறிக்கிறது. மூலஸ்தான மூர்த்தியை "இராமேசுவரர், இராமலிங்கம், இராமநாதர்" என்ற பலவாறாக அழைக்கப்படுகிறது. இராமேசுவரத்தில் வழிபடும் மஹோததியும் (வங்காள விரிகுடா) இரத்தினகரம் (இந்துமாகடல்) கூடுமிடமாக தனுஷ்கோடியில் (சேது) முழக்கம் செய்தால் தான் காசி யாத்திரை பூர்த்தியாகும். சேது என்ற வடமொழிச் சொல்லுக்கு பாலம் என்பது பொருள் இராமபிரான் இலங்கையை அடைவதற்காக கட்டிய அணையையே இது குறிக்கிறது. இராவணன் தம்பியும், இராமனின் நண்பனுமான விபிஷணனின் வேண்டுகோளுக்கிணங்க இராமன் சேது அணையினை வில் நுனியால் உடைத்ததால் தனுஷ்கோடி என்ற பெயர் ஏற்பட்டது. (தனுஷ்-வில், கோடி-முனை) இராமன் தன் வில் முனையால் சேதுவுக்கு இடம் காட்டியமையால் இப்பெயர் உண்டாயிற்று எனவும் கூறுவர். இராமேசுவரம் கோயில் வழிபாட்டிற்கு முன்னும் பின்னும் சேது தீர்த்தத்தில் நீராடுவது ஐதீகம்.

### இராமேசுவரம் பற்றிய புராணக்கதை

இராவண சம்ஹாரம் முடிந்ததும் மகரிஷிகளின் கருத்துப்படி இராவணனை கொன்ற பிரமஹத்திதோஷம் நீங்குவதற்காக இராமன், சீதை , இலட்சுமணனும் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்டனர் என்று புராணங்கள் கூறுகின்றன. பிரதிஷ்டை செய்வதற்கு நல்ல வேளை குறித்து கைலாசத்திலிருந்து லிங்கம் கொண்டு வரும்படியாக இராமன் அனுமனை அனுப்பியதாகவும், நெடுந்தொலைவிலுள்ள கைலாசத்திலிருந்து அனுமன்

லிங்கம் கொண்டு வருவதற்கு காலம் தாழ்ந்ததால் சீதை மணலால் செய்த லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. திரும்பி வந்த அனுமன் கோபம் கொண்டு மணலால் செய்யப்பெற்ற லிங்கத்தை அகற்ற முயன்று இயலவில்லை. அனுமனை ஆறுதல் செய்வதற்காக இராம லிங்கத்தின் பக்கத்தின் அனுமன் கொண்டு வந்த விசுவ லிங்கத்தை ஸ்தாபித்து அதற்கு பூசை முதலியன முதலில் செய்ய வேண்டும் என்று இராமன் ஆணையிட்டார்.

**திருக்கோயிலின் அமைப்பு**

இராமாயண காலத்திலேயே தோன்றியுள்ள கோயில் கி.பி 12ம் நூற்றாண்டு வரை கூரை கொட்டகையில் ஒரு துறவியின் பாதுபாப்பில் அமைந்து இருந்தது பின்னர் கி.பி 12-ம் நூற்றாண்டில் இலங்கை அரசர் பராக்கிரமபாகு என்பவர் இத்திருக்கோயில் மூலஸ்தானத்தைக் கட்டினார் என்பதற்குரிய சான்றுகள் உள்ளன. கோயிலுக்குத் தேவகோட்டை நகரத்தார் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. கோயிலின் தெற்கு இரண்டாம் பிரகாரம் இராமநாதபுரம் மன்னர் திருமலை சேதுபதியினால் கட்டப்பட்டுள்ளது. 18-ம் நூற்றாண்டில் முத்துராமலிங்க சேதுபதி அவர்களால் உலகப்பிரசித்தி பெற்ற மூன்றாம் பிரகாரம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கோயில் உயர்ந்த மதிற்சுவர்களைப் பெற்று விளங்குகிறது.கிழங்கு மேற்கில் 865 அடி நீளமும், தெற்கு வடக்கில் 657 அடி அகலமும் உடையது. கிழக்கு மேற்கு திசைகளில் இரண்டு கோபுரங்களைக் கொண்டுள்ளது. வடக்கு தெற்கில் மிகச்சிறந்த பகுதியாக நீண்ட பிரகாரங்கள் உள்ளன. இரு பக்கங்களிலும் ஐந்தடி உயரத்தில் மேடையின் மேல் கட்டப்பட்ட தூண்களின் நடுவே இப்பிரகாரங்கள் அமைந்துள்ளன. மூன்றாவது மேற்கு பிரகாரம் மேற்கு கோபுர வாயிலிருந்து சேதுமாதவர் சந்திக்கும் போகும் வழியில் “சொக்கமடான் பலகை” போல் அமைந்து இருப்பதால் இந்த மண்டபத்திற்கு சொக்கட்டான் மண்டபம் என்று பெயர் விளங்குகிறது.

கோயில் தெற்கு வடக்கு பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 640 அடி நீளமும், கிழக்கு மேற்கு பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 400 அடி நீளமும்,கிழக்கு மேற்கு உட்பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 244 அடி நீளமும், தெற்கு வடக்கு உட்பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 352 அடி நீளமும் உடையன. கிழக்கு மேற்காக ஒவ்வொன்றும் 117 அடிநீளமும், வடக்கு தெற்காக ஒவ்வொன்றும் 172 அடி நீளம் உடையன. ஆகவே கோயிலுள்ள மொத்த பிரகாரங்கள் மொத்த நீளம் 3850 அடி ஆகும். அவற்றின் உயரம் தரையிலிருந்து மேல் தளம் வரை 30 அடி ஆகும். சிற்ப சிறப்புடையதாகும்.

ஆலய அமைப்பு , அடுக்கடுக்கான பிரகாரங்களும் கட்டிடங்களும் மிகவும் சிறப்பு தருவதாக அமைந்துள்ளன.

**திருக்கோயில் தீர்த்தங்கள்**

இராமேசுவரம் தீர்த்தம் மகிமை வாய்ந்த திருத்தலமாகும்.இத்தலத்தில் உள்ளும், வெளியிலும் 44 தீர்த்தங்கள் உள்ளன. கோயிலினுள் 22 தீர்த்தங்கள் உள்ளன. மற்ற 22 தீர்த்தங்கள் இராமேசுவரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ளன.

உள்ளே உள்ள 22 தீர்த்தங்கள் .1.மகாலெட்சுமி தீர்த்தம்,2.சாவித்திரி தீர்த்தம்,3.காயத்திரி தீர்த்தம்,4. சரஸ்வதி தீர்த்தம், 5.சேதுமாதவ தீர்த்தம், 6.கந்தமாதன தீர்த்தம், 7.சுவாட்ச தீர்த்தம், 8.கவாய தீர்த்தம், 9. நள தீர்த்தம், 10.நீள தீர்த்தம்,11.சங்கு தீர்த்தம்,12.சக்கர தீர்த்தம்,13.சூரிய தீர்த்தம்,14. பிரம்மஹத்திவிமோசன தீர்த்தம்,15. சுந்திர தீர்த்தம், 16. கங்கா தீர்த்தம், 17.யமுனா தீர்த்தம், 18.சுயா தீர்த்தம், 19.சிவ தீர்த்தம், 20.சாத்யமிர்த தீர்த்தம், 21.சர்வ தீர்த்தம், 22.கோடி தீர்த்தம்.

வெளியே உள்ள 22 தீர்த்தங்கள்.1.வேதாளவரத தீர்த்தம்,2. பாபவிநாச தீர்த்தம்,3. பைரவ, கபி தீர்த்தம், 4. சீத தீர்த்தம், 5. மங்கள தீர்த்தம், 6. அமிருதவாபி தீர்த்தம், 7.வில்லுருணி தீர்த்தம், 8.லட்சுமண தீர்த்தம், 9.ராம தீர்த்தம், 10.சுக்கிரிவ தீர்த்தம், 11.அங்கத தீர்த்தம், 12. சாம்பவ தீர்த்தம், 13.தரும தீர்த்தம், 14பீம தீர்த்தம், 15.அருச்சுன தீர்த்தம், 16.நகுல தீர்த்தம், 17.சதாதேவ தீர்த்தம், 18.திரௌபதி தீர்த்தம், 19.அகத்திய தீர்த்தம், 20.பிரமதீர்த்தம், 21.நாக தீர்த்தம், 22.திருப்பாற்கடல்.

**முடிவுரை**

இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களில் வடக்கே பக்ரிநாதர், கிழக்கே பூரி ஜெகந்நாதர், மேற்கு துவாரகம், தெற்கே இராமநாதர் (இராமேசுவரம்) ஆகியவை புகழ் பெற்றன. இவைகளில் இராமநாதம் ஒன்றே சிவத்தலம் மற்றவை மூன்றும் வைணவத் தலங்கள். இராமபிரான் (வைணவர்) ஈஸ்வரனை சிவலிங்க வடிவில்(சைவத்தை) பிரதிஷ்டை செய்தார் என்பதாலும், சைவ மதத்தினரும், வைணவ மதத்தினரும் வந்து கூடி வழிபடுவதாலும் இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களிலுள்ள இராமேசுவரம் மிகவும் முக்கிய இடத்தை பெறுகிறது. இந்தியாவிலுள்ள பன்னிரண்டு ஜோதி லிங்க ஸ்தலங்களில் ஒன்று அருள்மிகு இராமலிங்கம் அமைந்த இராமேசுவரம் ஆகும்.

************

**ஆ. சுதா**
முதுகலை பட்ட மாணவி



## பண்டைய சமூகத்தில் நாட்டுப்புறவியல்

இந்திய பண்பாடு என்பது நீண்ட மரபை கொண்டது. பண்டைய காலத்தில் மனிதன் தனது வாழ்க்கையின் பழக்க வழக்கங்களை வாய்மொழியாவும்

எழுத்து மொழியாகவும் வெளிப்படுத்தினான். வாய்மொழி பழக்க வழக்கங்கள் அனைத்தும் நாட்டாரின் வலக்காற்றுகளாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில் நாட்டார் வழக்காற்றியல் மிக தோய்வு நிலையை நோக்கி சென்று கொண்டுயிருக்கிறது. அவற்றை மீட்டுருவாக்கம் செய்து இளைய தலைமுறைகளுக்கு நாட்டார் என்னும் நாட்டுப்புறவியலில் உள்ள நல்ல செயல்பாடுகள் கற்றுத்தருவதைக் இ;க்கட்டுரையின் முக்கியமான நோக்கமாகும்.

## விளையாட்டுக்கள்

விளையாட்டுக்கள் பல்வேறு வகைப்பட்டவைகளாகும். ஆயின் அவற்றிற்குச் சில பொதுவான பயன்பாடுகள் உள்ளன விளையாட்டுகள் அவற்றில் பங்கு கொள்பவர்களது உடலையும், மனத்தையும் வளப்படுத்துகின்றன. பங்கு கொள்பவர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் புத்துணர்ச்சியை அளிக்கின்றன. போட்டி மனப்பான்மையை ஊட்டுகின்றன. அதே நேரத்தில் கட்டுப்பாட்டையும், ஒற்றுமையையும், கூட்டுறவு மனப்பான்மையையும் வலியுறுத்துகின்றன.

நாட்டுப்புற விளையாட்டுக்கள் பலவகைப்பட்டவை. அவை பல்வேறுபட்ட வயதினருக்கும், ஆண் பெண் இரு பாலருக்கும் வேறுபடுகின்றன. அவற்றில் பெரும்பான்மையானவற்றில் உடற் பயிற்சியோடு பாடல்களும் சொற்றொடர்களும் இடம் பெறுகின்றன.

## 1.இளம் குழந்தைப் பருவத்து விளையாட்டுகள்

இளம் குழந்தைப் பருவத்து விளையாட்டுக்கள் பல்வேறுபட்ட வைகளாகும். இளம் குழந்தைப் பருத்தில் ஒரு குழந்தை தானாக ஓடியாடி விளையாடத்தக்க உடல், மனவளர்ச்சி பெறுவரை அக்குழந்தைகயின் அன்னையின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இப்பருவத்து விளையாட்டுக்கள் குழந்தையின் கால், கை மற்றும் பல்வேறு உறுப்புகளை அசைத்துப் பயிற்சி செய்வதற்கு பிறர் கூறும் வாக்கியங்களைப் புரிந்து கொண்டு இக்குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. உதாரணமாக ‘கைவீசம்மா கைவீசு’ என பாட்டை மற்றவர்கள் பாட, குழந்தைகள் கையை வீசும் ‘நிலா நிலா ஓடி வா’ என்று பாடும் பாடலையும் மழையைச் சுட்டிக் காட்டி ‘மழையே மழையே வா வா’ போன்ற பாடும் பாடலையும் குறிப்பிடலாம்.

## 2.பூப்படையும் பருவத்து விளையாட்டுக்கள்

பூப்படையும் நிலையில் பெண்கள் அமர்ந்த நிலையில் வீட்டிற்குள், பெண்களுடன் மட்டுமே சேர்ந்து விளையாடுகின்றனர். ஓடியாடி விளையாடுவது பெண்மைக்கு இழுக்காகும். பெண்கள் ஆண்களிடமிருந்து ஒதுங்கி வாழவேண்டும் பெண்களின் உலகம் வீட்டின் உட்பகுதியாகும்.

உதாரணமாக பல்லாங்குழி, பகடை போன்றவை ஆண்களும் விளையாடுகின்றனர்.

### 3. ஒப்பாரி

ஒப்பாரி பாடுவது என்பது பெண்களுக்கென்று வகுக்கப்பட்ட குணங்களோடு ஒத்துப்போவதால் ஒப்பாரி பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட துறையாகக் கருதப்படுகின்றது. ஒப்பாரி பாடுவது இறந்தவரின் இழப்பிற்கான துக்கத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பாக மட்டுமின்றி, பெண்கள் தங்களது தனிவாழ்வில் அனுபவிக்கும் இன்னல்களை வெளிப்படுத்தக் கிடைத்த வாய்ப்பாகவும் விளங்குகின்றது. ஒப்பாரிப் பாடல்கள் வெவ்வேறு வகைப்பட்ட உறவினர்களுக்கு வெவ்வேறு விதமாகப் பாடப்படுகின்றன. இவைகளில் பெண்கள் தங்களது அன்னை, கணவர், உடன்பிறந்தவன், குழந்தை இவர்களது இழப்பிற்காகப் பாடும் பாடல்கள் மிகுதியாக உள்ளன. உதாரணமாக அன்னையின் இறப்பிற்காகப் பாடப்பெறும் பாடல்களில் அதிகமாகக் காணப்படும் செய்தி அன்னையின் பாசத்தையும், ஆதரவையும் அரவணைப்பையும் இழக்கும் துயரமாகும்.

“ நெய்ஊட்டி வளர்த்த உன்
நேசத்தை நான் மறவேன்
பால் ஊட்டி வளர்த்த உன்
பாசத்தை ளான் மறவேன்
குடத்தோட தண்ணீர; எனக்குக்
குளிர வார்த்தாலும்
தாய் வார்த்த தண்ணீர் போல்
தாகந் தணியா தெனை”

### 4. தாலாட்டு

தாலாட்டு என்பது குழந்தைகளைத் தொட்டிலில் இட்டுத்தூங்க வைப்பதற்காகப் பாடப்படும் பாட்டாகும். இதுவும் பெண்களது தணிப்பட்ட துறையாகும். புதிய தலைமுறையினருக்கு. அதிலும் நகர்புறங்களில் வாழும் பெண்கள் பலருக்குத் தாலாட்டுப் பாடல்கள் பாடத்தெரியாது.கிராமத்திலுள்ள வயது முதிர்ந்த பெண்கள் இன்னும் தாலாட்டுப் பாடுகின்றனர். உதாரணமாக, ஆண் குழந்தைகளின் கல்வியின் மேன்மையை

“சென்னைப் பட்டணம் ஐக்கோடு - என் ஐயா நீ
செயிக்கப் பொறந்த கண்ணோ
பசுமலை பள்ளிக்கூடம் - என ஐயா நீ
படிக்கப் பொறந்த கண்ணே

எளுமலை பள்ளிக்கூடம் - என ஐயா நீ
எளுதப் பொறந்த கண்ணே”

என்னும் பெண் குழந்தையை அழகுபடுத்துவதை,

“பச்சை வளவி எடு - என் அம்மாளுக்கு
புலவர்ண மஞ்சள் தோடு
நீல வளவி எடு என் அம்மாளுக்கு
நெளிவர்ணப் பச்சை தோடு”

என்று பாடுவார்.

இதை தவிர, தாலாட்டுப் பாடல்கள் அன்னையின் வாழ்வில் நிகழ்ந்த சோகங்களை வெளிப்படுத்துவதுடன் தன்னோடு பகை உணர்வு கொண்ட உறவினர்களை மறைமுகமாகத் தாக்கவும் உதவுகின்றன. அன்னையின் எதிர்கால வாழ்விற்குத் தனது குழந்தையின் ஒளிமயமான எதிர்காலத்தையே நம்பியிருக்கும் போக்கும் தாலாட்டுக்களில் வெளிப்படுகின்றது.

**நாட்டுப்புறக் கதைகள்**

ஆண்குழந்தைகளுக்கும், பெண்குழந்தைகளுக்கும் இளவயது முதலே கதைகள் கூறப்பட்டாலும். அக்கதைகளைக் கூறுபவர்கள் பெரும்பாலும் வயதில் முதிர்ந்த பெண்களே ஆவர்.

ஒரு சமூகத்தினரின் பழக்க வழக்கங்கள் பண்பாட்டுக் கூறுகள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள், கோட்பாடுகள், ஆவல்கள், ஏமாற்றங்கள் முதலிய பல்வேறு பண்புகளையும் அச்சமூகத்தினரிடையே வழங்கிவரும் கதைகளின் மூலம் அறியலாம். ஒரு சமூகத்தின் ஏட்டில் எழுதப்படாத சரித்திரத்தையும் கூட அம்மக்களிடையே வழங்கிவரும் கதைகளின் மூலம் அறிந்துகொள்ள இயலும்.

நாட்டுபுறக் கதைகள் சமூகத்தின் மதிப்பீடுகளை உள்ளடக்கியவை களாகும். பெரும்பான்மையான கதைகள் பெண்களை இரு மாறுபட்ட இயல்புகளோடு சித்தரிக்கின்றன.

**மக்கள் பின்பற்றும் சமய சடங்குகள்**

மக்கள் பின்பற்றும் சடங்குகள் பல்வேறு வகைப்படுத்தலாம் அவை,

**1. பருவமடைதல்**

ஒரு பெண்ணின் வாழ்வில் பூப்படைவது என்பது மிக முக்கியனான நிகழ்வாகும், ஒரு பெண் பருவமடைந்ததைக் குறிப்பிடும் சொற்களான “சமைதல்” “பூப்படைதல்” என்பவை இக்கருத்தையே வெளிப்படுத்துகின்றன. இந்நிகழ்விற்குப் பின்னர் ஒரு பெண்ணின் உடல் மாசு நிறைந்தது என்ற கருத்தும், அது கொடிய ஆவிகளின் ஆதிக்கத்துக்கு உட்படக்கூடியது என்ற

அச்ச உணர்வும், அவள் வாழ்வில் பிறரைச் சார்ந்து அவர்களது ஆதரவில் வாழவேண்டியவள் என்ற கருத்தும் வெளிப்படையாகவும், குறியீடுகள் மூலமாகவும் அவள் மனதில் ஆழப்பதிய வைக்கிப்படுகின்றன.

“தண்ணிக்குப் போ மகளே
தடம் பார்த்து போ மகளே
முட்டாளுப் பையங்கண்டா
முகங்கொடுத்துப் பார்க்காதே
பாசங்கலந்து வரும்
பலபேரும் மோக்கும் தண்ணீ
நீரும் கலந்துவரும்
நிண்ணு மோக்க நேரமாகும்”

(பூப்படைந்த பெண்கள் ஆண்களுடன் பழகுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுரைக் கூறும் பாடலில் ஒன்றாகும்)

ஒரு பெண் அழகான மணப்பெண்ணாகவும், தனது உடலில் கருவைச் சுமந்து ஈன்றெடுத்து வளர்க்கவும் ஆயத்தம் செய்யப்படுகின்றாள். அவளது வாழ்க்கையின் குறிக்கோள் மணம் புரிந்து கொண்டு தன் கணவனுக்கு உண்மை உள்ளவளாக வாழ்வதுதான் என்னும் கோட்பாடும் வலியுறுத்தப்படுகின்றது.

**2. திருமணச் சடங்குகள்**

திருமணம் என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் திருப்புமுனையாக அமைகின்றது. ஒரு பெண்தான் பிறந்து வளர்ந்த சூழலை விட்டுப் பிரிந்து, கணவன் வீட்டாரது வாழ்க்கைமுறைக்குத் தக்கவாறு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறாள்.

**3. நலுங்கு**

நலுங்கு எனப்படும் நிகழ்ச்சியில் பாட்டும், கேலியும், விளையாட்டும், மகிழ்ச்சியும் மிகுந்திருக்கும். இந்நிகழ்ச்சியின் பொழுது மணமகனும் மணமகளும் எதிர்எதிராக அமர்ந்திருப்பர். அவர்களைச் சுற்றி அவரவர் குடும்பத்தினரும் அமர்ந்திருப்பர். முதலில் மணமகள் மணமகனுக்குக் கையில் சந்தனம் தடவி, கால்களில் செங்குழம்பினால் அழகு செய்வாள். இவை போன்று மணமகன் மணமகளுக்குத் திருப்பிச் செய்வான் பின்பு, மணமகனும் மணமகளும் பூப்பந்து உருட்டுதல், பல்லாங்குழி முதலிய விளையாட்டுக்களை விளையாடுவர். சுற்றி அமர்ந்திருக்கும் பெண்கள் மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையே போட்டியை ஊக்குவிப்பர்.

**4. ஊஞ்சல்**

ஊஞ்சல் என்னும் நிகழ்ச்சியில் மணமகனையும் மணமகளையும் ஊஞ்சலில் அமர்த்தி, ஆட்டி, மற்ற பெண்கள் சுற்றி நின்று பாட்டுப் பாடுவர். பெரும்பாலும் இப்பாடல்கள் கடவுளர்களுக்கு நிகழ்த்தப்பெறும. திருமணங்களில் அக்கடவுளர்கள் குறித்த பாடலாக அமையும்.

**5. குழந்தைச் சடங்குகள்**

ஒரு பெண்ணினது வாழ்வு அவள் குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஒரு பெண் குழந்தைப் பெறுவதற்காக பல்வேறு வகையான நோன்புகள், உண்ணாநோன்பு போன்றவற்றை மேற்கொள்ளல் குழந்தை பிறந்தவுடன் நடத்தும் சடங்குளில், குழந்தைவரம் வேண்டி நேர்ந்த கடவுளர்களின் பெயரிடுதல், கோயில்களுக்குக் காணிக்கை அளித்தல், தலைமுடியைக் காணிக்கையாகச் செலுத்துவது போன்றவை.

**முடிவுரை**

நாட்டுப்புறவியல் உள்ள நல்ல செயல்பாடுகள் கற்றுத்தருவது மூலமாக அழிந்துவரும் நமது பண்பாட்டு பாரம்பரியத்தை மீட்டுருவாக்கம் செய்வதோடு அவற்றை பாதுகாக்க முடியும்.

**கட்டுரைக்கு பயன்படுத்திய நூல்கள்**


*1. திருமதி. முத்துசிதம்பரம், தமிழக நாட்டுப்புறவியலில் பெண்கள்.*

*2. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு.*


************




**M.Abinaya**
**B.Ed I year**


# பண்டைய இலக்கியங்களில் இசைத் தமிழ்

இயல், இசை, நாடகம் என்று தாய்மொழியினை முத்தமிழ் என்று வகைப்படுத்துகின்றனர். இசைத்தமிழானது இயற்றமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் இன்றியமையாததாய் விளங்கக் கூடியதாகும் சிலம்பில் மாதவியின் பதினோரு வகை ஆடலரங்கேற்றத்தைப் பற்றிக் கூறும்போது, இளங்கோவடிகள் இசையையும், பண்ணிசைக்கும் திறனையும், இசை ஆசிரியனின் அமைவையும் பற்றிக் கூறுகின்றார்.

“ யாழுங் குழலுஞ் சீரும் மிடறும்

*தாழ்குரற் றண்ணுமை யாடலோ டிவற்றின்*

*இசைந்த பாடலிசையுடன் படுத்து*

*வரிக்கு மாடற்கு முரி பொருளி யக்கித்*

*தேசிகத் திருவி னோசை யெல்லாம்*

*ஆசின் றுணர்ந்த வறுவின னாகிக்*

*கவியது குறிப்பு டாடற் தொகுதியும்*

*பகுதிப் பாடலும் கொளுத்துங்காலை*

*வைகயறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்*

*அசையா மரபி னிசையொன் றானும்"*

*என்ற பாடல் இசைப் பற்றிக் கூறுகிறது.*

*சொல்லவேண்டிய கருத்துக்களைக் கேட்போர் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வண்ணம், இனிய ஓசையோடு கூடிய சொற்கள் புலப்படுத்துவது இசை. இசை என்பது இயை என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது என்றும், ஒத்து, நரம்பு, பண், தாளம், சொல், பொருள் முதலியன இசைந்த இசைப்பே 'இசை' என்றும் கொள்ளத்தக்கது.*

## இசை என்னும் கலை

*இசை எழும் இடம் ஏழு வகையாகும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். இவற்றால் எழுப்பப்படும் பண்கள் முல்லை, பாலை, குறிஞ்சி, மருதம் என நான்கு வகைப்படும். இவை மேலும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்று நான்கு நான்காய் விரிந்து பண் பதினாறாகக் காணலாம்.*

*தமிழ்நாட்டில் இசைக் கலையில் வல்லவராய் இருந்தவர் பாணர் என்னும் இனத்தவர். இவர்கள் இசைப்பாடல்களைப் பாடி அரசர்களிடமிருந்து பொன்னையும், பொருளையும் பெற்றதனைச் சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையால் அறிகிறோம். மனிதரையன்றி விலங்குகளையும் தன்வயப்படுத்தவல்லது இசை. இதற்கு இலக்கியச் சான்றுகள் பலவாக உள்ளன. அவற்றுள் ஒன்று,*

*" காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்*

*யாழ்வரைத் தங்கி யாங்கு"*

*எனவரும் கலித்தொகை அடிகளாகும்.*

## இசைக் கருவிகள்

*இசைப்பாட்டிற்கும் பரதநாட்டியம், கூத்து முதலியவற்றிற்கும் இசைக்கருவிகள் இன்றியமையாதவை இசைக்குரிய ஓசைகள் நயத்து, சில*

பொருள்களில் உண்டாகின்றன. அப்பொருள்கள் தோல், கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடறு என்பன. "இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று" என்றார் ஔவையார்.

## இசையும் - ஐவகை நிலங்களும்

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள், பண்களைத் தோற்றுவித்தது போலவே ஐவகை நிலத்து, வாழ்ந்தோடும் இசைக்கருவிகளையும் தோற்றிவித்தனர். குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் யாம யாழினையும், தொண்டகப்பறையினையும் கண்டார்கள். முல்லை நிலத்தோர் முல்லை யாழினையும், ஏறு கோட்பறையினையும் மேற்கொண்டார்கள். மருத யாழும், மணமுழவும் மருதநிலத்திற்கு உரியனவாயின. விளரி யாழினையும் மீன்கோட் பறையினையும் நெய்தல் நிலத்தோர் கொண்டார்கள். பாலை நிலத்தோர் பாலை யாழினையும் நிரைகோட் பறையினையும் பெற்றார்கள் இவையே ஆதிகால யாழ்வகைகளும் பறை வகைகளுமாம். இவற்றினின்றுக் கிளைத்தெழுந்து வளர்ந்தனவே இன்று நாம் காணும் இசைக்கருவிகளனைத்தும்.

## சிலப்பதிகாரத்தில் இசைத்தமிழ்

சிலப்பதிகாரம், இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இந்நூல் இசைப் பற்றியும் நாடகம் பற்றியும் பல குறிப்புகளைத் தருகின்றன. இந்நூலில் வரும் மங்கல வாழ்த்துப் பாடல், கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, குன்றக்குரவை, வாழ்த்துக்கு என்ற பகுதிகள் இசை பயின்று வரும் பகுதிகளாகும் துன்பமாலையும், வஞ்சினமாலையும் இசைவிரவி அவலச் சுவை நிறைந்ததாகும்;

## பரிபாடலில் இசைத்தமிழ்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான 'பரிபாடல்' தோன்றிய காலத்தில், எழுபது பாடல்கொண்ட நூலாக விளங்கியுள்ளது. இதில் 22 பாடல்கள்தாம் உள்ளன. மற்றவை கிடைக்கவில்லை, கிடைத்துள்ள பாடல் ஒவ்வொன்றன் கீழும், அவ்வப்பாடலை இயற்றிய புலவரின் பெயர் இசையமைத்தவரின் பெயர், யாழ், செந்துறை, வண்ணம், தூக்கு முதலியன தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றாலும் தமிழிசையின் பழமையையும் வளத்தையும், சிறப்பையும் அறிந்துகொள்ள முடிகிறது.

## அழிந்துபோன இசை நூல்கள்

சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசை நுணுக்கம் இசை விளக்கம், பஞ்சமா பாரதீயம், பண் அமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக்கூறு, பாடற்பண்பு, தாளவகையோத்து, தாள சமுத்திரம், கருவி இலக்கணம், அளத்தி அமைப்பு போன்றன அழிந்து போன இசைநூல்கள் ஆகும்.

### பக்தி இலக்கியங்களில் இசை

களப்பிரர் ஆட்சிக் காலத்திலும,; சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும், நாடகத் தமிழைப் போலவே இசைத்தமிழும் நலிவுற்றது, ஆனால் இசை ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலத்தில் மீண்டும் மலர்ச்சி பெற்றுப் புத்துயிர் பெற்று வளர்த்துள்ளது.

### தேவார திருவாசகத்தில் இசை

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர், தாண்டக வேந்தராம் திருநாவுகரசர், தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் கழகமோடு அமர்ந்த கண்ணுதற்கடவுளை இசையால் பாடிப்பரவினர். எண்ணற்ற தேவாரத் திருப்பதிகங்களை அருளிச் செய்தனர். "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் அருள்வாக்கு. "ஏழிசைச் சூழல்புக்கு இறைவன் இசைத்தமிழுக்கு ஆட்பட்டான்" என்று மாணிக்கவாசகர் தமது திருக்கோவையில் பாடுகிறார்.

திருவாசகத்தில் அமைந்துள்ள, திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேனம், திருவுந்தியார், திருப்பொன்னூசல் போல்வன இசைத் தமிழ்த் துறையைச் சார்ந்த பாடல்களாக விளங்குகின்றன.

ஆழ்வார் பாசுரங்கள் அனைத்தும் இசைத்தமிழ் ஊற்றுகளாகவே உள்ளன. இந்த உண்மை,

"பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்
பாலேபட்ட இவைபத்தும் வல்லார்க் கில்லை பரிவதே"

என்னும் நம்மாழ்வார் பாசுரத்தால் விளங்கும்.

### நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இசை பற்றிய குறிப்புகள்.

நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில மரபமைப்புப் பாடலில் இசை மிகுதியாகப் பயின்று வருவதனைக் காண முடிகிறது. ஆழ்வார்களின் பாடல்களில் இசை இயல்புகளும், அதன் விளைவுகள் பலவும் குறிப்பிடப் பட்டுள்ளன.

"பல்லாண்டு பல்லாண்ட பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
முல்லாண்ட திண்டோள் மண்வண் ணாவுன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு"

என்ற பாடலில், இசையின் தனிச்சிறப்புக் கூறுகள் அமைந்திருப்பதனைக் காணமுடிகிறது. பாடல் அமைப்பில் தாளக்கட்டும் இருக்கிறது. தாலாட்டு என்பது நாட்டுப்டுபுற இலக்கியங்களில் ஒரு பிரிவாகும், தாலாட்டு உலகம்

முழுவதும் பாடப்படும் ஒரு பாடலாகும், இது தமிழ்நாட்டில் 'ஆரிராரோ ராராரோ' என்ற இசைத் தொடக்கத்துடன் நீலாம்பரி ராகத்தில் பாடப்படுவதாகும்.

## நாட்டுப்புறப் பாடல்களில் இசை

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புற பாடல்களாகும், இது நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துரைப்பதாக நாட்டுப்புற பாடல்கள் உள்ளன. மண்ணின் மைந்தர் தம், மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று, உயிர்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற பாடல்களாகும்.

"மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே!
கோவை இலைமேலே
கொள்ளும் பனிநீரே!
பாவை இலைமேலே
படரும் பனிநீரே!"

என்ற பாடலில் இசையொலி இணைந்து வந்துள்ளதை காண முடிகிறது.

## தற்காலக் கவிதை வளர்ச்சிக்கு இசையின் பங்களிப்பு

இருபதாம் நூற்றாண்டில் தற்காலப் புதுக்கவிதைகள் தோற்றம் பெற்றன. இப்புதுக்கவிதைகளில் தமிழ்ச் சமுதாயத்தில் சுவையாக விளங்கும் இசைக்கலை பற்றியும் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளனர். அப்துல்ரகுமான் தன் பால்வீதி என்ற கவிதைத் தொகுப்பில் இசைத் தொடர்பான செய்திகளை கூறியுள்ளார்.

"ஒற்ற நெருப்பு உட்டின்
வாசிப்பில்
புல்லாங்குழலே
உருகுகிறது"

இக்கவிதையில் மெழுகுவர்த்தியின் தியாகத்தை குறிப்பிடுகின்றனர்.

## முடிவுரை

சங்க காலம் தொடங்கி 12ஆம் நூற்றாண்டு வரை வழங்கிவந்த இசைவகைகள் 13ஆம் நூற்றாண்டில் மங்கத் தொடங்கின. இத்தகைய இசை வளர்ச்சியை மேன்மைப்படுத்துவதற்காக திரிகூட ராசப்பக் கவிஞர், சிவக்கொழுந்து தேசிகர், வேதநாயகம் பிள்ளை, அண்ணாமலை செட்டியார், இராமலிங்க வள்ளலார் போன்ற பல பெரும் அறிஞர்கள் இசைத்தமிழ் வளர்ச்சிக்கு பணி செய்துள்ளனர்.

**கட்டுரைக்கு பயன்படுத்திய நூல்கள்**

1. டாக்டர். வி. கணபதி, நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்.
2. டாக்டர் கு. விஜயா, தமிழ் கற்பித்தலில் புதுமைகள்,
3. டாக்டர் அ. மீனாட்சி சுந்தரம், தமிழ் கற்பித்தல் சிறப்புத்தமிழ்.
4. டாக்டர் பி. இரத்தினசபாபதி, செம்மொழிக் கல்வி.

************



**C.Rashiya**
**B.Ed. I Year**

## இணையத்தில் இணைந்த தமிழ்

மொழி கருத்துப்பரிமாற்றக் கருவி, நம்முன் சிந்திக்கப் பெற்ற கருத்துகள் வெளிப்படும் பொழுது சிறக்கின்றன. சிறந்த கருத்துகள் மனித நேயம் வளர்த்து மானுடம் உய்ய வேண்டுமென்றால் அனைவரையும் சென்றடைய வேண்டும். சென்றடை ய வேண்டிய கருத்து தெளிவாகவும், எளிதாகவும், விரைவாகவும் இருத்தல் இன்றியமையாதது. இதற்கு அறிவியல் அணுகுமுறையில் விடையுண்டு. நம் வாழ்க்கையை வசதிப்படுத்திக் கொண்டுருக்கின்ற அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் பலவுண்டு. நாம் பேசும் மொழியின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அதன் தாக்கமுண்டு அதனால் ஆக்கமுண்டு. அதனை அறிந்தால் நம் வாழ்வில் பொருளுண்டு.

தகவல் தொடர்பில் ஊடகங்கள் என்பது தகவல்களைச் சேமித்து வைத்து மக்களின் தேவைக்கேற்ப வழங்கப் பயன்படும் கருவியாக உதவுகிறது. இது பெரும்பாலும் மக்கள் செய்திகள். கல்விச் செய்திகள் நீதிமன்றச் செய்திகள். சட்டப்பேரவை நாடாளுமன்ற நிகழ்வுகள் பொதுக் கூட்டங்கள் அறிவியல் பொருளாதார விளையாட்டுச் செய்திகள் முதலியன வாழ்வியலின் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஊடகங்களின் வழி மக்களுக்கு உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

### பரிணாம வளர்ச்சி

மனித (தகவல் தொடர்பு) பண்டைய காலங்களில் குகை ஓவியங்கள், வரைபடங்கள் மற்றும் எழுத்து ஆகியவற்றின் மூலம் நடைபெற்று வந்தது. பின்னர் இதழ்கள் வானொலி ,திரைப்படம் ,தொலைக்காட்சி ,கணிப்பொறி, பேஜிங், செயற்கைக்கோள், இணையம் ஆகியவற்றின் வழியாக பரிணாம வளர்ச்சி அடைந்தது.

**மக்கள் ஊடகம்**

மக்கள் ஊடகம் என்பது பெருமளவு மக்களைச் சென்றடைவதற்காக வடிவமைக்கப்படும். இது ஊடகத் துறையில் ஒரு பிரிவைக் குறிக்கும். நாடு தழுவிய வானொலி சேவைகள் செய்தித்தாள்கள் சஞ்சிகைகள் என்பவற்றின் அறிமுகத்தோடு 1920-களில் மக்கள் ஊடகம் என்னும் கருத்து பண்படத் தொடங்கியது. மக்கள் ஊடகங்கள் என்று சொல்லத்தக்க புத்தகங்கள் போன்றவை இக்கருத்துருவாக்கத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் இணைய ஊடகங்களூடாகத் தனிப்பட்டவர்களும் மக்கள் ஊடகத் தயாரிப்பாளர்களோடு ஒப்பிடக் கூடிய அளவுக்கு மக்களைச் சென்றடையும் வசதிகள் இருப்பதனால் மக்கள் ஊடகம் என்னும் கருத்து சிக்கலடைந்துள்ளது.

மக்கள் செய்தி ஊடகம் வழியாகத் தகவலை ஒரே நேரத்தில் மக்கள் தொகையில் பல பகுதிகளுக்குப் பரப்புவதன் மூலமாக பல்வேறு மட்டங்களில் தர்க்க ரீதியான ஆய்வை மேற்கொள்ளப்பயன்படுகின்றன. இதைப் பொதுவாக செய்தித்தாள் மற்றும் பத்திரிக்கை வெளியிடுதல், வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படம் ஆகியவற்றுக்குத் தொடர்புடையதாகும் இந்த மக்கள் ஊடகம் செய்தியைப் பரப்புவதற்கும் விளம்பரத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

**தமிழ் ஊடகம்**

இது தமிழர்களின் தொடர்பால் நடைபெறுகிறது. நாளிதழ் சிற்றிதழ் தமிழ் ஒலிபரப்புத்துறை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், இணையம் ஆகிய வடிவங்களின் ஊடகம் தமிழ்த் தொடர்பால் இடம் பெறுகிறது. பெரும்பாலான ஊடகங்கள் ஒரு நிலப்பரப்புக்குள் உள்ள வர்க்கங்களை நோக்கியே அக்கறை காட்டுகின்றது. இணையம் உலகத்தாரையே இணைக்கும் ஒரு முக்கிய ஊடகமாக திகழ்கின்றது.

**தமிழ் இணையம்**

இன்று தமிழ் கணினித் திரையின் மூலம் தகவல் நெடுஞ்சாலையில் பயணம் செய்கிறது. வேறு எந்த இந்திய மொழியையும் விடத் தமிழ் கணினியில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ்தான். தமிழ் ஆட்சி மொழியாகவுள்ள அரசுகளும் உலகளாவிய தனியார் நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் தமிழார்வலர்களும், தமிழ் இலக்கியங்களையும் தமிழ் இலக்கணங்களையும் இணையத்தில் இடம் பெறச் செய்துள்ளனர். மேலை நாடுகளில் பணி புரியும் தமிழர்கள் பலரிடம் கணினி வசதியுடன் தமிழார்வமும் ஒன்று சேர அவர்கள் தன்னார்வமாகப் பல முயற்சிகள் செய்து இணையத்தில் தமிழ் விரிவாக விரைவாகப் பரவ வகை செய்துள்ளனர்.

## இணைய தளத்தில் தமிழ்

தமிழர்களால் ஏறத்தாழ 350 தமிழ் மென்பொருட்கள் தோன்றியுள்ளன. சொல்லாளர்களான கலைஞர் 99 கவிதாச் சொல்லாளர் பதமி முரசு இளங்கோ 2000 சரபி 2000 அமுதம் இனஸ் கிரிப்ட் 2000 ஆக்ருதி பொன்மொழி முதலானவை கணினியில் தமிழ் உள்ளீடு செய்வதற்குப் பயன்படும் தமிழ் மென்பொருள்கள்.

தமிழில் வெளியாகும் பல நாளிதழ்களும் வார மாத இதழ்களும் மின் இதழ்களாக இணையத்தில் வெளிவருகின்றன. இணையத்தில் முதல் மின் இதழ் என்னும் பெயர் பெற்றது தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் உலகமே குக்கிராமமாக மாறி வருகிறது. இணையம் இதயங்களை இனைக்கின்றது. ஒத்த எண்ணங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடக்கும் தமிழ்ச் சமூகம் இணைய சமூகமாக மாறி வருகின்றன. தமிழ் தொடர்புடைய கருத்துக்களின் கருவூலங்களாக சில இணையதளங்கள் உள்ளது. அதுமட்டுமல்லாமல் தமிழர்களின் சேவைக்காக திருக்குறள் ஔவையார் படைப்புகள், திருவாசகம், ஆத்திச்சூடி, திருப்பாவை, புறநானூறு இன்னபிற இலக்கியங்களும் மின்னாக்கம் செய்யப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இது தமிழர்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. இணையத்தில் சிதறிக் கிடக்கும் தமிழ் சார்ந்த செய்திகளைத் தேடித்தருவதற்கு பல தேடுபொறிகள் உள்ளன.

## இணையம் வழித் தமிழ் கல்வி

கடல் கடந்து வாழும் தமிழ்ச் சமூகத்தினர் தம் சந்ததியினர் மொழியால், இனத்தால், பண்பாட்டால் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்க்கத் தமிழறிவைத் தங்கள் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய சூழலில் பல தமிழ்கல்வித் தளங்கள் உருவாக்கியுள்ளனர்

## முடிவுரை

இன்றைய நவீன யுகத்தில் மக்கள் பலவிதமான தொழிநுட்பக் கருவிகளைப் பயன் படுத்தினாலும் அதில் முதன்மை வகிப்பது இணைய தளம். மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து செய்திகளையும் உடனுக்குடன் இணையம் வழங்குகின்றது. இவை போன்று இணையவழி, தமிழ்கற்க தமிழரிடையே இன்னும் அதிகப் பயன்பாடு உடையதாகித் தரணி முழுவதும் தமிழ்பரவுவதற்கு வகை செய்ய வேண்டும், அறிவியல் அணுகுமுறையால் தமிழை மேன்மைப்படுத்த வேண்டும்.

## கட்டுரைக்கு பயன்படுத்திய நூல்கள்

1. முனைவர் அ. மீனாட்சி சுந்தரம், தமிழ் கற்பித்தல் சிறப்புத் தமிழ்.

2. முனைவர் வை.சு.சு. கண்ணன், மின் - தமிழ்

***********

**K.சங்கீதா**
*இளங்கலை இரண்டாமாண்டு*
*எஸ்.ப்ரீத்தி கல்வியியல் கல்லூரி*
*சிவகங்கை*



# புதுக்கவிதை

"இலக்கியம் -காலத்தைக் காட்டும் கண்ணாடி கவிதை -உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடு".

மனிதன் உணர்வுகளை, எண்ணங்களை பிரதிபலிக்கின்ற கண்ணாடிதான் மொழி. மொழியின் விதைகளே வார்த்தைகள். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்கிறோம்.

"ஒரு வார்த்தை என்பது
ஸ்படிகம் போன்றதல்ல
ஒளி ஊடுருவக் கூடியதல்ல
மாறுதலுக்குட்படாததல்ல
அது உயிர்ப்புடன் கூடிய
எண்ணங்களின் போர்வை"

ஆம்..... தமது எண்ணத்தை, கருத்தை, உரிமையை நிலைநாட்ட, தனது உணர்ச்சியை வெளிப்படுத்த சூழலுக்கு தக்கவாறும், காலத்திற்கு ஏற்றவாறும் மாற்றம் அடைந்துக் கொண்டிருக்கிற இலக்கியக் குழந்தைதான் கவிதை. அந்த கவிதையானவள் புதுக்கவிதை என்னும் உடையணிந்து,ஹைக்கூ மொழி பேசி இதயத்தினுள் நுழைந்து சிந்திக்கத் தூண்டுகிறாள்.

## புதுக்கவிதையில் இயற்கை சூழலியல்

நாம் வாழும் சூழலை, அதன் பாதுகாப்பை உணர்த்த சமூக அக்கறை கொண்ட கவிஞர்களால் முகிழ்த்தெழுந்தவையே சூழலியல் கவிதைகள். மனிதகுலம் வளர தேவையான விவசாய நிலங்களின் வீழ்ச்சியை கவிஞர் சிதம்பரநாதன்,

"கன்னி நிலமென்று
சொன்ன பிறகும்
இரசாயன முறையில்
கருத்தரிக்கச் செய்கிறானே
தொழு உரத்தை

தொழ மறந்தான்
மண்புழுவின் மரணத்திற்கு
அழ மறுத்தான்
வலுவிழந்தாள்
மூப்படைந்து கிழவியாகவில்லை
முப்பதுக்கும் முன்பே
மலடியாகிப் போனாள்."

என்று மண்ணையே மலடியாய் மாற்றிவிட்டார்கள் நம் மக்கள் என கூறுகிறார்.

நீரின்றி அமையாது உலகு என்பதும், இனி மூன்றாவது உலகப்போர் ஒன்று வந்தால் அது தண்ணீரின் தட்டுப்பாட்டிற்குத்தான் என்பதும் நாம் அறிந்த உண்மை.

தெரிந்தே நீரை மாசுபடுத்துதல் அதைவிடக் கொடுமை

"கரிசல் காட்டில்
கலர்பஞ்சு வெடிக்கிறது
சாயத் தண்ணீர் கலப்படம்"

என்று எழுதுகிறார் அன்பழகன்.

"ஓசோன் திரை எரிந்து கிழிவது
உங்கள் ஏ.சி வெளிவிடும்
குளோரோ புளூரோ கார்பனால் என்றால்
புதுப்பணக்காரன் கோபிப்பான்
ஏழைவீட்டு விறகடுப்பு
நடுக்குடுப்பத்து ரெப்ரிஜிரேட்டர்
பன்னாட்டு வணிகப்பாடுகள்
அனைவரும் அவரவர் திறமைக்குத்தக
காற்று மண்டலத்துள் கதிர்வீச்சு"

ஓசோன் அடுக்கு அழிந்து வருவதற்கான காரணத்தை தமிழ்நாடன் கூறுகிறார்.

மாறிவரும் காலத்திற்கு ஏற்பவே மாற்றமும் பெறுகிறது பிரச்சனையின் வடிவமும்....

இன்று மனிதகுலத்தின் கையிலே உள்ள மரணஓலைதான் நெகிழி(Plastic).

"காய்கறி வாங்க எடுத்துச் சென்ற மஞ்சள் பை

இறைச்சி வாங்க எடுத்துச் சென்ற ஓலைப்பை

எண்ணெய் வாங்க பாதுகாத்த கண்ணாடிக் குப்பி

தண்ணீருக்கு இல்லாத தனிமணம் தரும் பித்தளைச்செம்பு

அத்தனையும் தொலைத்துவிட்டு

உயிர்வாழ தொடங்கி விட்டோம்

பிளாஸ்டிக் இதயத்தோடு...."

புதுக்கவிதைகளில் பெண் பற்றிய மதிப்பீடும்,

**இளைஞர் சந்திக்கும் சிக்கல்கள் குறித்த கவிதைகள்**

காலங்காலமாக பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள், அவர்களது உரிமைகள் நிலைநாட்டப்படாமலே இருந்துவருகின்றன. இன்று பெண்ணியவாதிகளே பெண்களின் சமூகத் தகுதியை அடையாளம் காட்டும் போக்கை ஆராயும் வகையில் புதுக்கவிதைகள் அமைகின்றன.

"ஆண் என்பவன் ஆக்ஸிஜன் இல்லை

அவன் இல்லாமலும் சுவாசிக்கலாம்."

என பெண் உளுத்துப்போன உணர்வுகளோடு வாழ வேண்டிய அவசியம் இல்லை என கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி கூறுகிறார்.

கீதா வெங்கடேஷ் தனது கவிதை ஒன்றில் பெண்கள் ஆண்களை நேருக்கு நேர் சந்தித்து கேள்வி கேட்க வேண்டும் என்றும், தனது உரிமையைநிலைநாட்ட வேண்டும் எனவும் கூறுகிறார்.

"சீதையாய் இருந்தோம், தீக்குளிக்கச் செய்தீர்கள்

நளாயினியாக இருந்தோம், சுமக்க வைத்தீர்கள்

சந்திரமதியாக இருந்தோம் விற்றுவிட்டீர்கள்

அதனால், முடிவு செய்துவிட்டோம் நாங்கள்

நாங்கள் நாங்களாகவே இருப்பதென்று:

இன்றைய இளைஞர்கள் சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சனையே வேலையில்லா திண்டாட்டம், காதல்......

"அவர்கள்

பாட்டாசுகளைப் பற்ற வைக்கிறார்கள்

அரிசியில்லாத எங்களுக்குப்

பற்ற வைக்க முடியாது

அடுப்பைக் கூட"

என்று வேலையின்மையால் உண்டானவறுமையை அமுதன் எடுத்துரைக்கிறார்.

இன்று காதல் என்பது கட்டாயமாகி விடுகிறது. கூடவே காயமும் காட்டாயமாகி விடுகிறது.

"ஜாதிமத சிலுவைகளில்
இன்று இங்கே
எத்தனை காதல்கள் உடல்கள்
அறையப்படப் போகின்றனவோ தெரியவில்லை"

**புதுக்கவிதைகளில் ஆளுமைச்சிந்தனைகள்**

வாழ்வின் நோக்கத்தை உணராதவர்களையும் இலட்சியப் பாதையை அறியாதவர்களையும் காலத்தை மதியாதவர்களையும் சோம்பித் திரிபவர்களையும் தட்டி எழுப்பும் எச்சரிக்கை பணியாக பல புதுக்கவிதை ஹைக்கூ கவிதைகளும் பணியாற்றுகின்றன. காலத்தை பற்றியும், நாம் அதை வீணடிக்கும் விதத்தையும்

"விழித்தாலும் உறங்கினாலும்
வீணே என்னுடனிருக்கும்
காலத்தை என்ன செய்ய"

என வண்ண நிலவன் விரிக்கிறார்.

"நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று என்பது நம் கையில் வீனை"

காலத்தின் மதிப்பு பற்றி புதுகைத்தென்றலின் வரிகள்.

நமது செயல்களை செய்ய வேண்டிய நேரத்தில் செவ்வனே ஒருமுகத்தோடு செய்தல் சிறப்பு என்பதை,

"இனி ஒரு விதிசெய்வோம், அதை எந்தாளும் காப்போம,
இனியேனும் நாம் உண்ணும் போது உண்போம்,
உறங்கும் போது உறங்குவோம்,"

என அழகான வரிகள் உணர்த்துகின்றன. மனிதமாண்பு பற்றி கழனியூரனின் ஹைக்கூ கவிதை ஒன்று,

"ஒரு கன்னத்தில் அடித்தான்
மறு கன்னத்தைக் காட்டினேன்
அங்கும் அறைந்தான்"

இளைஞர்களை எழுச்சிகொள்ளச் செய்யும் தாராபாரதியின் வரிகள் சில

"வெறுங்கை என்பது மூடத்தனம் உன்
விரல்கள் பத்தும் மூலதனம்"

“எழுந்தால் கொடிமரம்
விழுந்தால் அடிமரம்
இதுதான் தமிழன் எனக்காட்டு”
“கிழக்கோடு கைகுலுக்கு
மேற்கோடு புன்னகை செய்
வடக்கோடு சேர்ந்து நட
தெற்கோடு கூடி உன்”

*புதுக்கவிதையில் சமுதாய எழுச்சி வரிகள்*

*“அனைவரும் சமம்” என்பதை உணர்த்தும் புதுமைப்பித்தனின் வரிகள்*

*“எவனொருவன் கீறினாலும் இரத்தந்தான் வரும்*
*உள்ளிருக்கும் தீமையைக் காண்பிக்கும் சிவப்பு வெளிச்சம் மாதிரி”*

*அவற்றின் இன்றியமையாமையை கவிஞர் ரவி அவர்களின் ஹைக்கூ இவ்வாறு கூறுகிறது.*

*“பேயாய் அலைகிறது மனம் அமைதியைத் தேடி”*

*“பத்தாவது தடவையாக விழுந்தவனிடம்*
*முத்தமிட்டு சொன்னது பூமி*
*ஒன்பதுமுறை எழுந்தவனல்லவா நீ”*

*ஈரோடு தமிழன்பன் தோல்வி என்பது கடைசியல்ல, வெற்றி என்பதும் நிரந்தரமல்ல என்பதை உணர்த்துகின்றது அவ்வரிகள் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை,*

*“கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்*
*இங்கு புல் விளைந்திடல் உண்டு*
*நற்பயிர் விளைந்திடல் இல்லை”*

*என்று பெண்கல்வியின் இன்றியமையாமையை உணர்த்தும் வகையில் கவிதை வடிக்கின்றனர் கவிஞர்கள்.*

*புதுக்கவிதையின் போக்கானது மூன்று படிநிலைகளைக் கடந்து இன்றைய சூழலில் பல்வேறு வடிவங்களில் இயற்றப்படுகின்றன. ஹைக்கூ கவிதைகள் இன்றைய போக்காகக் கருதப்பட்டாலும் சென்றியூ கவிதைகளும் இன்று இயற்றப்படுகின்றன. தொடக்கத்தில் மரபுக்கவிதைகளே செல்வாக்கு செலுத்திக் கொண்டிருந்தன. பின்பு ஆங்கிலக் கல்வியினால் கிடைத்த ஆங்கில அறிவும் வாசிப்பும் புதுக்கவிதைக்கு அடித்தளம் இட்டது. பாரதி முதல் யுகபாரதி வரையிலான கவிதைப் பாரம்பரியம் தமிழில் அளப்பரிய சாதனைகளைப் படைத்திருப்பதை’ காணலாம்.*

***********

B.Jaya surya
B.Ed II year



# FEMINIEST WRITTERS IN INDIAN ENGLISH

## Introduction

Feminism brings many things to philosophy including not only a variety of particular moral and political claims, but ways of asking and answering questions, critiques of mainstream philosophical views and methods and new topics of inquiry. Feminist contributions to and interventions in mainstream philosophical debates are covered in entries under the "feminism interventions" Entries covered under the rubric " Feminism topics" concern philosophical issues that arise as feminists articulate accounts of sexism. Critique sexist social and cultural practices and develop alternative visions of a just world. In short, they are philosophical topics

## Feminizes writers in Indian English

1.Kamala Das 2. kiran Desai 3. Nalini Bala Devi 4.Chandrakala A. hate

## Kamala Das

Kamala Das she is knows Indian Author and poet.

**Born:** 31 march 1934

Punnayurkulam, Malabar District madras presidency British India

**Died:** 31 May 2009 ( aged 75)

Pune, Maharashtra India

**Pen name**: Madhavikutty

**Occupation**: poet novelist, short story writer

**Nationality**: Indian

**Genre**: poetry, novel, short story memory

**Notable awards**: Ezhuthachchan puraskaram, velar Award. Sahitya Academi Award world prize, Asian poetry prize, Kent award

**Early life**

Kamala Das was born in punnayurkulam Thrissur District in Kerala on 31 March 1934 to V.M. Nair. a former managing editor of the widely

circulated Malayalam daily Mathrubhumi and Nalapat Balamani Amma, a renowned Malayali poet.

At the age of 15 she got married to bank officer madhava Das Who encouraged her writing interests and she stared writing and publishing both in English and in Malayalam.

**Literary career**

She was noted for her many Malayalam short stories as well as many poems written in English "l

Gift him what makes you woman the scent of long hair the musk of sweat between the breasts, the warm shock of menstrual blood and all your Endless female hungers"

The Looking Glass although occasionally seen as an attention grabber in her early years she is now seen as one of the most formative influences on Indian English poetry. In 2009 The Times called her "The mother of modern English Indian poetry" Her last Book titled the Kept Woman and other stories featuring translation of her short stories was published posthumously.

He holds the UNESCO Peace chair and professor of geopolitics at the manipal Academy of Higher Education he was formerly a resident editor of the Times of India on 31 may 2009 aged 75 She died at a hospital in pune her body was flown to her home state of Kerala she was buried at the palayam Jama Masjid at thiruvananthapuram with full state honor.

**2. Kiran Desai**

Kiran Desai (born 3 September 1971) is an Indian author her novel the Inheritance of Loss won the 2006 man booker prize and the National book critics circle fiction award.

**Early and personal life**

Kiran Desai is the Daughter of Anita Desai herself short listed for the booker prize on three occasions. She was born in Chandigarh on 3 September and spent the early years of her life in pune and Mumbai she studied in the cathedral and john cannon school where she studied creative writing at Pennington college Hollings university and Columbia university.;

**Works**

Hullabaloo in the Guava orchard in (1998)

Salmon Rushdie

The Inheritance of loss in (2006)

**Awards**

Betty Track Award

National book critics circle Fiction award ( 2006)

American academy in berlins prize (2013)

**3. Nalini bale Devi (1898-1977)**

Nalini Bala Devi (23 march 1898- 24 December 1977) was a noted Indian writer and poet of Assamese literature known for nationalistic as well as my social poetry.

**Early life and career**

She was born in guwahati in 1898 Assam. Her father. Karma veer Nabin Chandra Bordoloi (1875- 1936) Was a famous Assamese Indian freedom movement activist and writer.

**Awards and recognition**

1968 sahitya academic award 1955 Assam sahitya Sabah 1957 padma sri government of India.

**4. Chandrakala A Hate (1908-1990)**

Dr. chandrakala anandraw hate (1903 – 1990) was a prominent author Feminist social worker and professor in Bombay India.

**Early years**

Born chandrakala jagannath murkier on 12 September 1903 to Dr. Jaga and Lahanibai Murk Ute. She was born into a family belonging to Mumbai s Davivadnya community. Education played and important role from early in her life she wanted to marry Amanda Ramakrishna Hate.

**Literary career**

Dr. Hates work entailed studying and improving the status of women in Indian society. She received in Indian society. She received and MA in Economics and wrote Hindu woman and her future (1948) she wrote the books changing status woman in post independence India (1969 and turn whether to (1978)

Dr. Hate died of esophageal cancer in Mumbai in 1990 In the years after. The city of Mumbai dedicated and renamed a chowk in Girgaum. South Mumbai Chandra kale bai hate chowk in her honor.

## Feminism and the diversity of women

To consider some of the different strategies for responding to the phenomenon of intersectionality lets return to the schematic claims that women are oppressed and this oppression is wrong or unjust. Very broadly then one might characterize the goal of feminism tone ending the oppression of women e.g. by classism, homophobia. Racism, Ageism ableism, elc then it might seem that the goal of feminism is to and all oppression that effects women.

## Feminism as anti sexism

Some feminists would urge us to recognize that there isn't a systematic way to unify the different instances of sexism and correspondingly there is no systematic unity in what counts as feminism instead we should see the basis for feminist unity in coalition building feminist views that does not assume that sexism appears in the same form dr. for the same reasons in all contexts.

This includes cases in which women as a group are explicitly targeted by a policy or a practice but also includes cases were the policy or practice affects women due to a history of sexism even if they are not explicitly targeted.

## Conclusion

Feminism is not world peace or love and harmony, but the removal of the systemic universal devaluing of women and women's work by society.

************

S.Nathiya
I-year B.Ed



# The status of women's Education in society

## Introduction

Half if our population consists of women. Women have been exploited by the male dominated society. In domestic life treated as slaves and servants. In domestic lip the women is subdued to a mouth. Less creature that has to drudged all her life. A woman has been used only for happiness of man. To be upliftment in the society women found their right place in society.

## Why do need womens education?

In our society the women forms the slaves of domestic lips so

"It is told men built houses but women create homes"

A good women is a lovable wife to her husband. She is living mother to her children. Most of the educated persons told about women's education .one who says that

"When you educate a man you educate an individual person but if you educate a girl you educate a family".

Good education alone will provide our women with dignity, equality and liberty. So educate of women have been given top priority .Now a days a lot of women are working as teachers, doctors, Engineers. Collectors and minister also. Most important women like Mrs. Indhira Gandhi and, mother thereasa had proved that the hand that rocks the crudle rules the land.

**Conclusion**

The government is keen on importing education to women. In big cities to start most of the international schools and colleges exclusively for women. Women are taught technical courses in like polytechnics field also. Mother Teresa women's university has been started at kodiakanal only for women.

"Response is one of the powerful weapons to occupy ones heart so always gives a small response for those who care for you"

so please give to some response of women's education and all the field. Please don't treat as a slave and servants.

************



K. Krishnavi
I- B.Ed

## SHAKESPEARES LIFE AND WORKS

Born: April 23, 1564

Died: April 23, 1616

**Father of drama: Shakespeare**

The English playwright, poet, and actor William Shakespeare was a popular dramatist. He was born six years after Queen Elizabeth 1(1533-1603) ascended the throne, in the height of the English renaissance.

## Early life

Shakespeare was born in 23 April 1564. As Stratford –on-Avan in England. His father John Shakespeare was a well-to-do farmers and trader of the village. His mother Mary came of a noble family. He entered the village grammar school at the age of nine. He left the school at the age of twelve when his father's fortunes began to decline.

## Shakespeare's father was a man of modert means

It is largely believed that John Shakespeare neglected his buriness his in ordinate zeal for public life. He lost heavily in business and was in all probability a man of modert means.

## Shakespeare's marriage

Shakespeare married Anne Hathaway in November **1582**. The first child Susannah was born in may 1583. In feb 1585 Shakespeare and Anne had twins hamnet and Judith.

## Shakespeare's initiation into drama

Some historians believe that Shakespeare was an ignorant youth who was driven from his careless restic ecistence to very different carees in London. The same historians tell us that Shakespeare began by rewriting the play of others.

## Shakespeare's arrivel in London

Though no fixed date can be give for Shakespeare arrival in London. It is normally accepted that he reached there in 1584.

## Shakespeare was trained as an actor

Shakespeare elevated to new inconceivable heights some critics believe he was a born genius. While others believe he was a creation of his environment. There is no doubt that he was guided by public sentiment .He was trained first as an actor, and then as a reviser of plays, before he started writing plays independently.

## Shakespeare wrote 37 plays and 2 poems

Shakespeare wrote 37 plays out of these there were 17 comedies, 10tragedies, and 10histories. He wrote two famous poems (Venus and Adonis) Rape of Luccerne and 154 sonnets Addressed to the fair youth and The dark lady.

**Shakespeares period**

First period (1584-1594) was named by doweled In the workshop" primarily become Shakespeare was still learning his craft. Second period (1594-1599) was named "In the world" because Shakespeare was making rapid adrasces in the world of prosperity. Third period between (1599-1608) was named "out of depths" Because Shakespeare probed deep into his sensibilities and created four great tragedies. This was also a period of inner turmoit. Fourth period (1608-1613) was named "on the heights" Because this period saw Shakespeare ascending a pure and serene elevation from the earlier you're of inner turmoil.

**Female characters in Shakespeare plays**

There characters are sexualized check flirtations. "The bawdy woman" they are often working class characters such as the nurse, in "Romeo and Juliet" Margaret in "much ado about nothing" or Audrey in "As you like it" mainly speaking in pross as befitting their low social status, There character often use secular innuendo when conversing law class characters like there can get away with more risqué De baviours perhaps because they have no fear of losing social status.

**Non-dramatic works**

The theaters were closed because of plague during much of 1593 and 1594. At this time Shakespeare wrote two narrative poems for the earl of Southampton. Both the seriocomic (both happy and sad) vanus and Adonis and the tragic rape of lucrece are based on the renaissance traditions of myth and symbolism.

**Famous plays**

"Shakespeare wrote 37 plays" There are.

1. Henry –VI part I

2 .Henry –part II

3. Henry – part III

4. Richard II

5. Richard III

7. Henry IV

8. King Johns

9. Hendry V
10. Henry VIII
11. Titus Andronicus
12. Romeo and Juliet
13. Julius ceasar
14. Hamlet
15. Troilus and Cressida
16. Othello
17. Macbeth
18. Timon of Athens
19. King Lear
20 Antony and Cleopatra
21. Cymbeline
22. Two gentlemen of Verona
23. Taming of the shrew
24. The comedy of Errors
25. Loves labours lost
26. A mid summer nights dream
27. The merchant of Venice
28. The merry wives of Windsor
29. Much ado about nothing
30 As you like it
31. Twelfth night
32. Measure for measure
33. All's well that ends well
34. winter's tale
35. The tempest
36. Coriolanus
37. Pericles, prince of tyce

**Conclusion**

Thus Shakespeare's play accurately mirrors the political, social, literary and religious conditions of the Elizabethan age. He died in April 23, 1616.

************